சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5	இதழ்: 05	அக்டோபர் - 2023	விலை - ரூ.15/-
VOL:5	ISSUE: 05	OCTOBER - 2023	Rs. 15/-



சகலமும் அறியும் ஸ்ரீ சாங்கு சித்தர்!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-5 மலர்-05 அக்டோபர் - 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி



அன்பு குழந்தையே!

உன்னிடமிருந்து எதையாவது ஒன்றை எடுத்துக்கொண்டால் அதை விடச்சிறந்த ஒன்றை கொடுத்தே தீருவேன் என்பதை மறவாதே! நம்பிக்கையோடு காத்திரு.

யாராவது ஒருவரிடம் உள்ளதொன்றை பார்த்து பொறாமைப்படாதே! ஒருவேளை நீ அவருக்கு அது அருள் என்று நினைத்திருப்பாய். ஆனால் அதுவே அவருக்கு பெரும் சோதனையாக இருக்கும்.

யாரையும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்காதே. அது உன் நிம்மதியை தொலைக்க வைக்கும். காலம் அதன் கருமத்தை கச்சிதமாக செய்யும் வரை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிரு!

நீ வாழ்வில் எதை இழந்தாலும் அதற்கு பதிலீடாக எதையாவது பெறுவாய். ஆனால் இறைவனின் மீதான நம்பிக்கையை நீ இழந்து விட்டால் அதை ஈடு செய்ய உன்னால் எதையும் பெற முடியாது.

எல்லா சூழ்நிலையும் ஒரு நாள் கண்டிப்பாக மாறும். பெரிய அளவில் வாழ்ந்து ஒன்றுமில்லாமல் போனவர்களும் உண்டு. ஒன்றுமில்லாமல் வாழ்ந்து, பெரிய அளவில் உயர்ந்தவர்களும் உண்டு.

மற்றவர்களிடம் இருப்பதில் எவை என்னிடம் இல்லை என்று சிந்திப்பதை விட மற்றவர்களிடம் இல்லாதது எவை என்னிடம் உள்ளது என்று யோசித்துப்பார். காலத்திற்கும் உன்னைக் காக்க நானிருக்கிறேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் அறுபத்து மூன்றாவது இதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 03.09.23 ஞாயிற்றுக் கிழமை காலை10 மணிக்கு சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை-23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

வழக்கம்போல் காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் தொடங்கிய விழா, தியானம், பஜனை எனத் தொடர்ந்தது. காலை 10 மணிக்கு இதழ் வெளியீட்டு விழா துவங்கியது. இம்மாத இதழை 'பாராயணப்பகலவன்' திரு.சுந்தர் சாய்ராம் அவர்கள் வெளியிட, 'குருவருள்வேண்டி' திரு.அசோக் குமார் சாய்ராம் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் திரு.அகஸ்டின், திரு. ராஜசேகர், திரு.உமா சங்கர், திரு. சிவலிங்கம், திரு.லெட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித் தனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு, சாய் தியானாலயா சார்பில் அன்ன பிரசாதம் வழங்கப் பட்டது.

மேலும் நமது இதழுக்கு, விழுப்புரம் கலா அவர்கள், ஆயுள்



சந்தாதாரர் ஒருவரையும், ஒரு வருட சந்தாதாரர் ஒருவரையும், கோவை ஸ்ரீனிவாசன் அவர்கள் மூன்று வருட சந்தாதாரர் இருவரையும், சென்னை திலகம் அவர்கள் மூன்று வருட சந்தாதாரர் ஒருவரையும் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளார்கள். அவர்களும், அவர்களது குடும்பத்தார் அனைவரும் நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக் கிறோம்.

நமது சாயி மகராஜ் குருவைதேடி ஆன்மீக மாத இதழின் சந்தாதாரர் களுக்கு, சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில் சார்பில்"இலவச சீரடி தரிசன வாய்பை" வழங்கு கிறோம். ஆயுள் சந்தாதாரர்களில் ஒரு அதிர்ஷ்டசாலி குழுக்கலின் மூலம் தேர்ந்தெடுத்து சாய்





தியானாலயா நடத்தும் 6 நாள் சீரடி புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும், 5 வருட சந்தாதாரர் களில் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்பட்டு 4 நாள் சீரடி புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் இலவசமாக பெறுவார்கள்.

3 வருட சந்தாதாரர்களில் ஒருவருக்கு ரூ.1000 மதிப்புள்ள சிறப்பு பரிசும், 1 வருட சந்தாதார்க ளில் ஒருவருக்கு ரூ.500 மதிப்புள்ள சிறப்பு பரிசும் வழங்கப்படும்.

ஏற்கனவே உள்ள சந்தாதாரர்களை யும் சேர்த்து, வரும், 31.12.2023 வரை இணையும் புதிய சந்தாதாரர் களுடன் வருகின்ற 07.01.2024 அன்று நடைபெறும் 66 வது புத்தக வெளியீட்டு விழாவில், பக்தர்களின் முன்னிலையில் குலுக்கல் நடத்தப்பட்டு அதிர்ஷ்டசாலி சந்தாதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்படுவார்கள்.

பக்தர்கள் வரும் 31.12.23 க்குள் நமது இதழுக்கு, சந்தா செலுத்தி, இவ்வறிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள் கிறோம். இனி வரும் ஒவ்வொரு வருடமும் சந்தாதாரர்களுக்கென இலவச சீரடி புனிதப் பயணம் தொடரும் என்பதையும் மகிழ்ச்சி யோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனை வரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மன நிம்மதி யுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜயம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG, REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

சகலமும் அறியும் ஸ்ரீ சாங்கு சித்தர்!

சென்னை கிண்டி அருகில் உள்ள பிரிங்காச்சலம் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த அரங்கையர், குள்ளம்மாள் தம்பதிகளுக்கு, 1835 ஆம் ஆண்டு சுவாமிகள் அவதரித்தார். அவருக்கு பெற்றோர் சிவலிங்கம் என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

இளவயதில் கல்வி கற்க தொடங்கிய சிவலிங்கனார் மிக விரைவாக பயின்றார். பத்தாண்டில் அனைத்து நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். பதிமூன்று வயதிற்குள்ளாக பதினென் சித்தர்கள் பாடிய நூலனைத்தையும் கற்றுத் தேர்ந்தார்.

இருபது வயதுக்குள் தத்துவவிசாரம் புரிந்து எங்கும் நிறைந்து எல்லாமாய் உள்ள பிரம்மத்தை அறிய பேரவாக் கொண்டு தகுந்த குருவினைத் தேடி அலைந்தார். அவ்வேளையில் ஒழி விலொடுக்கம்" எனும் சிறிய நூல் கிடைக்கப் பெற்றார். இந்நூல் சீர்காழி கண்ணுடைய வள்ளலார் இயற்றியது. இந்நூலை இயற்றிய கண்ணுடைய வள்ளலாரை தம்முடைய ஞான குருவாக உள்ளத்தில் கொண்டார்.

அவ்வள்ளளார் தம்மை ஆட்கொ காண்டதை பூரணாநந்தோதயம்" என்னும் நூலில் பதிவிட்டுள்ளார். சீர்காழி கண்ணுடைய வள்ளலாரின் திருவருளைப் பெற்ற பிறகு இவ ருடைய பெயர் சாங்கு சித்த சிவலிங்க நாயனார் என்று வழங்குவதாயிற்று.



1855 ஆம் ஆண்டு சிவலிங்க நாயனாருக்கு பெற்றோர்கள் வேலாயி என்னும் பெண்ணை திருமணம் செய்து வைத்தனர். நாயனார் அவர்கள் இல்லறத்தில் ஈடுபட்ட பின்னர் தமது அலுவலை முன்னிட்டு சென்னை சேத்துப்பட்டில் உள்ள ஜகந்நாதபுரம் என்ற பகுதிக்கு குடிபெயர்ந்தார். சுவாமிகளுக்கு, உமையலிங்கனார், ரெங்கய்யர். என்று இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர்.

நாயனார் அக்காலத்தில் பென்னி



அண்ட் கம்பெனி நிறுவனத்தின் இயக்குனராக இருந்த கிளமெண்ட் சிம்சன் என்னும் துரைமகனாரின் அலுவல் பணியும் சமையல் பணிகளையும் செய்துவந்தார். பணிபுரியும் அலுவலகத்தில் நாயனார் அவர்கள் உலக நிலையிலிருந்து விடுபட்டு யோக நிலையில் ஆழ்ந்து விடுவார்கள். இவ்வாறு அரிய யோக சக்தியால் பெறற்கரிய வாக்கு வன்மையை பெற்று, வரும் காலங்களில் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளை முன்கூட்டியே உணரும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

சித்தர் நாயனாரின் தவ ஆற்றல் நாயனார் அவர்கள் எதிர் நிகழும் நிகழ்வுகளை முன் கூட்டியே உணர்ந்த படியால் தான் பணி செய்த அதிகாரி துரைமகனாருக்கு நிகழ இருந்த ஆபத்துகளை தடுத்து ஆட்கொண்டார்.

ஒரு நாள் இரவு துரைமகனார் படுக்கையறைக்கு செல்லும் போது இன்று படுக்கை அறையில் தாங்கள் உறங்கக் கூடாது என்று கூற, சுவாமிகளின் சொல் கேளாமல் படுக்கைக்கு சென்று உறங்கி விட்டார்.

சுவாமிகளோ துரை நன்றாக உறங்கியதும் தனக்குகீழ் வேலை பார்க்கும் ஆட்களின் துணையோடு துரையை கட்டிலோடு தூக்கி வெளியே கொண்டு வந்து வைத்துவிட்டார்.

நள்ளிரவில் படுக்கை அறையின் மேல்தளம் பேரிரைச்சலுடன் இடிந்து விழுந்தது. அச்சத்தோடு எழுந்த துரைமகனார் இடிந்து இருந்த கட்டிடத்தை கண்டு அதிர்ச்சி அடைந்து, விபத்தை முன்கூட்டியே சொன்ன மகானின் வாக்கு வன்மையை கண்டு வியந்தார்.

லண்டனில் துரைமகனார் மனைவியின் பிரசவம் மிகவும் சிக்கலாகிவிட்டது என்றும் இருவரில் ஒருவரைத்தான் காப்பாற்றமுடியும் என்று செய்தி வந்ததும் துரைமகனார் மிகுந்த கவலைக்கு உள்ளானார். இதை அறிந்த மகான் ஓர் அறைக்குள் சென்று அறைக் கதவை மூடுமாறும், தான் சொல்லும் வரை அறை கதவை திறக்க கூடாது என்றும் கூறிவிட்டு நவகண்ட யோகத்தில் அமர்ந்தார்.

சிறிது நேரம் கழித்து அறையிலிருந்து வெளி வந்த மகான் பிரசவம் நல்ல படியாக முடிந்தது என்றும் தாயும் சேயும் நலம் என்றும் மிக்க மகிழ்ச்சி மிகுந்த செய்தியை துரைமகனாருக்கு தெரிவித்தார். பிறகு லண்டனில் இருந்து சுகப்பிரசவம் நடந்ததாக துரைக்கு தகவல் வந்தது.



பிறிதொரு நாள் இரவு துரைக்கு கடுமையான காய்ச்சல் கண்டது. மருத்துவர்கள் சிகிச்சையும் பலன் தரவில்லை. துரைமகனார் படுத்த படுக்கையானார். முடிவாக துரை மகனார் பிழைக்கமாட்டார் என்று கூறி விட்டார்கள். அன்புள்ளம் கொண்ட நாயனார் தியானத்தில் அமர்ந்து ஒரு குவளையில் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார். தண்ணீரில் திருநீற்றை கலந்து துரைமகனாரை அருந்தும்படி செய்து அவரை உச்சி முதல் பாதம் வரை உற்று நோக்கி விட்டு சென்றார்.

மறுநாள் காலையில் துரை நோய் நீங்கப்பெற்று படுக்கையிலிருந்து எழுந்து புத்துணர்ச்சியோடு காணப் பட்டார். துரை மகனாரும் அவரது நண்பர்களும் மற்றவர்களும் நாயனா ரின் தெய்வத்தன்மையை வியந்து அவரை சிறந்த மகான் என்று பாராட்டினர்.

நாயனார் தியானம் செய்வதற்கு தனி அறையும் கொடுத்து உதவினார் துரைமகனார். நாயனார் அவர்கள் வாழ்நாள் முழுவதும் உபகாரச் சம்பளம் பெறுவதற்கு ஏற்பாடு செய்தார். தெய்வ ஞான கல்வியினை தொடர்ந்து மக்களுக்கு வழங்கிடவும் துரைமகனார் அவர்கள் சென்னை கிண்டியில் 22 ஏக்கர் நிலத்தை சுவாமிகளுக்கு நன்கொடையாக வழங்கினார்.

துரைமகனார் வழங்கிய இடத்தில் (தற்போது சமாதி உள்ள இடம்) ஞானசம்பந்தர் பெயரில் மடாலயம் நிறுவினார். அம்மடத்தின் வாயிலாக சொற்பொழிவுகளும் தெய்வ திருநெறி தொண்டுகள் ஆற்றி வந்தார். நாயனார் அவர்கள் தத்துவார்த்தம், பக்தி, சித்து, யோகம் முதலியவற்றை போதித்து வந்தார்.

திருவல்லிக்கேணியில் வாழ்ந்து வந்த பெருஞ் செல்வரும் வணிகரு மாகிய முனுசாமி என்பவரை பல சோதனைகளால் ஆராய்ந்து அவரை மாணவராக ஏற்று ஞான உபதேசம் செய்தார். அத்துடன் அவருக்கு "நிரதிசயானந்தன்" என்னும் தீட்சை நாமம் சூட்டினார்.

நாயனாரை போலவே நிரதிசயானந் தரும் ஞான மார்க்கத்தை வளர்த்து வந்தார். இவரும் சிறந்த நூல்



ஆசிரியராக விளங்கினார். இவ்வாறு நாயனார் அனேக ஞான கல்விகளை வழங்கி "உன்னுள் உத்தமனை காணும் வழி சாகா கல்வி" என தனது திருவாய் மலர்ந்தருளினார்.

நாயனார் அவர்கள் இல்லறத்தவராக தோன்றினாலும் வாழ்வில் பற்றற்றவராக விளங்கினார்கள். தமக்கென எந்த பொருளையும் சேர்த்துக் கொள்ளவில்லை. தான் மாதந்தோறும் பெற்ற ஊதியத்தையும் ஏழை எளியவருக்கு கொடுத்து உதவுகின்ற பரந்த தியாக உள்ளம் கொண்டவராக இருந்தார்.

தாம் சமாதி அடையும் காலத்தை முன்கூட்டியே மாணவர்களுக்கு அறிவித்து இருந்தார். அவர் அறிவித்தபடியே தமிழ் சார்வாரி ஆண்டு ஆனி மாதம் 29ஆம் நாள் (12.7.1900) மூல நட்சத்திரம் கூடிய பவுர்ணமி திதி வியாழன் அன்று சென்னை கிண்டியில் துரைமகனார் அளித்த இடத்தில் ஜீவசமாதி அடைந்தார்.

நாயனார் அவர்களின் சமாதி மக்கள் வழிபடும் தெய்வ ஆலயமாக திகழ்ந்து வருகிறது. ஆண்டுதோறும் நடைபெறும் ஆனி மாதம் மூல நட்சத்திரம் கூடிய பவுர்ணமி திதியில் மகா குருபூஜை சிறப்பாக நடைபெற்று வருகிறது. வாரந்தோறும் வியாழன் மற்றும் ஞாயிறு கிழமைகளில் சிறப்பு பூஜை, பிரதோஷ பூஜையை, அமாவாசை, பவுர்ணமி, சிவராத்திரி பூஜைகள் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. அன்னதானமும் வழங்கப்படுகிறது.

துரை மகனார் அளித்த 22 ஏக்கர் நிலத்தில் தற்பொழுது 1,200 சதுர அடி நிலத்தில் தான் நாயனாரின் அறிவுத்திருக்கோயிலான சமாதி ஆலயம் உள்ளது. மீதி இடங்கள் மக்கள் ஆக்கிரமிப்பில் சென்று விட்டது. நாயனார் முன்பு நடத்திய ஞான கல்வி வகுப்புகளை போல் தற்பொழுது பிரதி வியாழன் மாலை 6 மணிக்கு ஞானம், யோகம், மருத்துவம், இயற்கை உணவு பற்றிய போதனைகளை தேர்ச்சி பெற்ற குருமார்கள் பயிற்றுவிக்கிறார்கள்.

நாயனார் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் நீரும், திருநீரும் பிரசாதமாக வழங்கப் படுகிறது. இது அனைவருக்கும் நோய் தீர்க்கும் மருந்தாக உள்ளது. தீராத பெரிய நோய்களுக்கு அருமருந்தாக உள்ளது.

<u>சமாதி ஆலய முகவரி;</u>

மகான் சாங்கு சித்த சிவலிங்க நாயனார் திருக்கோவில், எண்: 36/16, சுப்பாகாலனி, எம்.கே.என் ரோடு கிண்டி சென்னை – 32. செல்: 9380615173.

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; சுந்தர்சாய், 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

நோய் தீர்க்கும் சாயி பிரசாதம்



– ஜெயந்தி ஸ்ரீராம்

அம்பத்தூரைச் சேர்ந்த கீதா சுப்பிரமணியன் என்ற பாபாவின் தீவிர பக்தை ஒருவர் பலநாட்களாக செரிமான கோளாறால் பாதிக்கப்பட்டிருக்கிறார். என்ன செய்தும் குணமாகவில்லை. நாளடைவில் வயிற்றில் புண் ஏற்பட்டு,சிறிதளவு உணவு கூட உண்ணமுடியாதபடி சிரமப்பட்டிருக்கிறார்.

ஏதேதோ மருத்துவம் பார்த்தும், பூரணமாக குணமாகவில்லை. அதன் விளைவாக கடந்த ஓராண்டாக ஒரு வேளைக்கு ஒரு இட்லி மட்டுமே உணவுவாக எடுத்துக்கொள்கிறார். ஒரு இட்லியைத் தவிர வேறு எது சாப்பிட்டாலும் வாமிட் செய்துவிடுவார். மருத்துவர்கள் அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறி தேதியும் குறித்துக்கொடுத்து விட்டார்கள். அறுவை சிகிச்சைக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறது.

இந்திலையில் அம்பத்தூர் பாபா ஆலயத்தில் நமது சாயி மகராஜ் குருவைதேடி புத்தகத்தை யாரோ கொடுத்திருக்கிறார்கள். அதை வாங்கிப் படித்துப்பார்த்தில் இருந்து குரு அவர்களை நேரில் சந்தித்து பேசவேண்டும் என்ற உந்துதலைப் பெற்றிருக்கிறார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை குரு தியான வகுப்பில் இருக்கும்போது, காலையில் எட்டு மணிக்கு, கீதா அவர்கள் குருவை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விளக்கம்கூறி உங்களை சந்திக்க வேண்டும். எப்பொழுது சந்திக்கலாம் என்று கேட்க, குரு அவர்களோ, நீங்கள் இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்து என்னைச் சந்தியுங்கள். தாமதிக்க வேண்டாம். நான் உங்களுக்காக காத்திருக்கிறேன். என்று கூறி வைத்தார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் கீதா அவர்கள், அவருடைய கணவர் திரு.சுப்பிரமணியத்துடன் வந்து

குருவை சந்தித்தார். அவர்கள் வந்த நேரம் தியானம் நடந்து கொண்டிருந்ததனால், முதலில் தியானத்தில் அமருங்கள். பிறகு பேசிக்கொள்ளலாம் என்று அவர்களை தியானத்தில் அமரவைத்தார் குரு.

அரைமணி நேரம் குரு அவர்கள் நிகழ்த்தும் பிரபஞ்ச தியானத்தில் கலந்து கொண்டவர்கள், தியானம் முடிந்ததும், கண்களைத் திறந்து தனது பிரச்சனையை குருவிடம் பகிர்ந்து கொண்டார். குரு அவர்களிடம் அறுவை சிகிச்சை என்று வைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டார்.

கீதா அவர்கள் நாளைக்கு சாய்ராம். என்று கூற, அதை கவனிக்காததுபோல் குரு என்னை அழைத்து, இவர்கள் இருவருக்கும் காலை உணவு கொடுங்கள் என்று கூற, திருமதி. கீதாவோ உடனடியாக, எனக்கு வேண்டாம் சாய்ராம். என்னால் சாப்பிட முடியாது என்று மறுத்தார்.

குரு அவர்கள், மறுக்காதீர்கள் இது பாபாவின் பிரசாதம். உங்களுக்காக பாபாவின் மேற்பார்வையில் தாயாரானது இந்த பிரசாதம். எளிய உணவுதான். உங்களால் எவ்வளவு சாப்பிட முடியுமோ அவ்வளவு சாப்பிடுங்கள். என்று வற்புறுத்த, கீதா அவர்களோ வேண்டா வெறுப்பாக சாப்பிட அமர்ந்தார்.


முதலில் அவருக்கு இரண்டு இட்லிகள் வைக்கப்பட்டது. அவரும் பயந்துகொண்டே இட்லியை சிறிய துண்டுகளாக்கி உண்ண ஆரம்பித்தார். அந்தநேரத்தில் குரு அவர்கள் பேச ஆரம்பித்தார். நாங்கள் அனைவரும் சாப்பிட்டுக்கொண்டே அவரது பேச்சை கேட்க ஆரம்பித்தோம்.



சிறிது நேரத்தில் குரு அவர்கள் என்னிடம், கீதா அவர்களுக்கு இன்னும் இரண்டு இட்லிகள் வையுங்கள் என்றார். நானும் இரண்டு இட்லிகளை வைக்கப் போனேன். என்ன ஆச்சர்யம் அவர் தட்டில் இருந்த இரண்டு இட்லியையும் உண்டுவிட்டார். அது மட்டுமல்ல அடுத்த இரண்டு இட்லிகளையும் ஆர்வத்துடன் வாங்கி உண்ண ஆரம்பித்தார்.

சிறிது நேரத்தில் வெண் பொங்கல் பரிமாறப்பட்டது. அதையும் சாப்பிட்டார். அவரையே அவரால் நம்ப முடியவில்லை. அவரின் கண்களில் இருந்து ஆனந்தக்கண்ணீர் கொட்டியது. சாப்பிட்டு முடித்துடன் வந்திருந்த அனைவரின் முன்பும் தனக்கு ஏற்பட்ட அற்புத நிகழ்வை விவரித்தார்.

தீவிர பாபா பக்தையான நான் கடந்த இரண்டு வருடமாக வயிற்றுப் பிரச்சனையால் அவதிப்பட்டு, கடந்த ஒரு வருடமாக, ஒரு வேளைக்கு ஒரு இட்லி மட்டுமே உண்டு வாழ்கிறேன்.



மருத்துவர்கள் நாளை காலையில் 10 மணிக்கு எனக்கு அறுவை சிகிச்சை வைத்திருக்கின்றார்கள்.

நான் பாபாவிடம் இறுதி நேரத்திலாவது அறுவை சிகிச்சையிலிருந்து என்னை காப்பாற்றிவிடுங்கள் சாயிநாதா என்று வேண்டிக்கொண்டே இருந்தேன். நேற்று எதேச்சையாக பாபா புத்தகத்தின் மூலம் குருவிடம் பேச வேண்டும் என்று தூண்டப்பட்டு தொலை பேசியில் தொடர்பு கொண்டேன். நாளை எனக்கு அறுவை சிகிச்சை என்பது குருவிற்கு தெரியாது. ஆனால் அவர் உடனடியாக இன்னும் ஒரு மணிநேரத்தில் வந்து என்னை சந்திக்கும்படி கூறினார்.

ஒருவேளை, நாளை வாருங்கள் என்று கூறியிருந்தால் நிச்சயம் நான் அறுவை சிகிச்சைக்குத்தான் சென்றிருப்பேன். இங்கு வந்திருக்க மாட்டேன். அப்படியே வந்திருந்தாலும் நிச்சயமாக சாப்பிட்டிருக்க மாட்டேன். குரு என்ன நினைத்தாரோ, என்னை வற்புறுத்தி சாப்பிடச் சொன்னதால் பயந்து கொண்டேதான் சாப்பிட ஆரம்பித்தேன். கடந்த இரண்டு வருட வாழ்வில் இன்றுதான் நான் நான்கு இட்லியையும் பொங்கலும் சாபபிட்டிருக்கின்றேன். பாபா, குருவின் மூலமாக எனக்கு அற்புதத்தை காட்டியிருக்கின்றார். இனி என் நோய் குணமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. குருவிற்கு எனது மனப்பூர்வமான நன்றிகள். என்று கூறி ஆனந்தப்பட்டார்.

குரு அவர்களோ, சாயி பிரசாதத்திற்கு நோய் தீர்க்கும் சக்தியுண்டு என்பதற்கு சாட்சி இதுதான். ஆகவே எங்கு சாயி பிரசாதம் கிடைத்தாலும் தயங்காமல் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு பிரசாதம் கிடைத்த நேரமும்,உங்கள் கர்மவினை தீரும் நேரமும் ஒன்றாக இருந்தால் உடனடியாக உங்கள் நோய்கள் மாயமாய் மறைந்து விடும். அதுவே பகவான் சாயிநாதரின் லீலா விநோதங்கள்.

கலியுகத்தின் கண்கண்ட கடவுளாக சாயிநாதரைப் பணியுங்கள். அவரின் பக்தலீலா விநோகங்களின் மீது நம்பிக்கை வையுங்கள். உங்களுக்கும் அது நிகழும்வரை பொறுமையாக இருங்கள் என்று ஆசி வழங்கி அனுப்பி வைத்தார்.

அதற்குப்பின் திருமதி. கீதா அவர்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்ளவில்லை. பகவான் சாயிநாதரின் அணுக்கிரகத்தால் இன்றுவரை எந்த தொந்தரவும் இல்லாமல் குடும்பத்துடன் மகிழ்சியாக வாழ்ந்து வருகிறார்.

குரு அவர்கள் சிறுவயதில் இருந்து கைகளில் ரட்சையோ, கழுத்தில்



மாலையோ எதையும் அணியும் பழக்கம் இல்லாதவர்கள். அதை அணியும்படி யாரையும் கட்டாயப்படுத்தியதும் இல்லை. நாங்கள் ஆயிரம் விசயத்தை உங்களிடம் கூறுவோம். அதில் உங்களது நம்பிக்கையே மிக முக்கியம் என்று கூறுவார்.


பிற்காலத்தில் மணிகண்ட மகானின் ஆசீர்வாதத்தால் சந்தனமும், சமயபுரத்தாளின் தரிசனத்தால் குங்குமமும் அணிந்து கொண்டார். பகவான் சாயிநாதரின் அருளால் பிற்பாடு திருநீற்றை நெற்றி நிறைய பூசும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

அப்படிப்பட்ட குரு, பக்தர்களின் பிராரத்தனைகளுக்காக, " சாயி தாயத்து" கொடுக்க ஆரம்பித்தார். அந்த நிகழ்விற்கு குரு எவ்வாறு ஆட்ப்பட்டார். சாயி தாயத்து எவ்வாறு தயாரானது என்று அடுத்த மாதம் காணலாம்.

– தொடரும்...

இறை உணர்வு

ஆண்டுகள் கழியக் கழிய, உங்கள் வயது ஏற,ஏற நீங்கள் அதிக அமைதியானவர்களாக ஆகிவிட்டீர்களா? அல்லது இன்னும் சீறி விழும் மனிதனாகத்தான் இருக்கிறீர்களா? என்று என்றாவது உங்களை நீங்களே சோதித்துப் பார்த்திருக்கின்றீர்களா? நீங்கள் உங்களது வாழ்க்கையில் இறைவனை அடையும் பாதையில் சென்றிருந்தீர்கள் என்றால் அமைதியானவராக மாறியிருப்பீர்கள். இல்லை என்றால் அமைதியை இழந்திருப்பீர்கள்.



இறைவனை அறிய வேண்டும் என்றால் நீங்கள் அவரை நேசிக்க வேண்டும். அவரை அறிவதற்கே இந்தப் பிறவி என்று உணர வேண்டும். எதைச் செய்தாலும் இறைச்சிந்தனை யோடு வெறுப்போ, அலட்சியமோ இல்லாது சரணாகதியோடு செய்ய வேண்டும். அவரோடு நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்ளுவதே உங்களது வாழ்க்கையின் லட்சியமாக இருந்திருந்தால் அவர் தன்னை உங்களுக்கு வெளிப்படுத்தியிருப்பார். நீங்களும் அமைதியான மனிதனாக மாறியிருப்பீர்கள்.

தொடர் –63

குருவைத் தேடி

அது சீரடி போகும் பாதையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் சாயி, சாயி என்ற ஒருமுகப்பட்ட எனது சிந்தனையும், தீவிரமான சாயி காதலும், என்னை சேர்க்குமிடத்தில் கொண்டு கண்டிப்பாக சேர்க்கும் என்ற நம்பிக்கையுடன் பொறுமையாக நடக்கலானேன்.

புதிய பாதை, புதிய வழி, புதிய மந்திரம், உணர்ச்சிப் பெருக்கால் கண்கள் நீரைச்சொரிய, மனம் முழுக்க சாயி, சாயி, என்றபடியே என் கால்கள் தானாக நடந்து கொண்டிருந்தன. மனதில் பயம் என்ற உணர்வே ஏற்படாதவாறு எனக்கு முன்னே ஓர் ஒளி என்னை வழிநடத்திச் செல்வதாக உணர்ந்தேன்.

இருபுறமும் தரிசு நிலங்கள், தூரத்தில் கேட்கும் நரியின் ஊளைச்சத்தம், எப்போதாவது ஒரு முறை என்னைக் கடந்து செல்லும் டிராக்டர் வாகனங்கள். திடீர், திடீர் என எங்கிருந்தோ வந்து என்னை சூழ்ந்து கொள்ளும் உள்ளூர் பைரவர்கள். வெட்ட வெளியில் சம்பந்தமே இல்லாமல் கேட்கும் கூக்குரல்கள். அத்தனைக்கும் அசராமல் என் கால்கள் வேகமாக நடந்து கொண்டிருந்தன.

நடந்துகொண்டிருந்த எனக்கு பின்புறமாக வந்த சூரிய ஒளி எனக்கு முன்னால் தன் கதிரைப் பரப்பி பொழுது விடிந்துவிட்டதை உணர்த்தியது. அன்று எண்ணவோ வெகு விரைவாகவே விடிந்து விட்டது



போலிருந்தது. ஆம்! விடிந்தும் விடியாத அந்த முன்னிரவில் நான் காக்கடி என்ற ஊருக்கு வந்து சேர்ந்தேன்.

அங்கிருந்த தேனீர் கடையில் தேனீர் அருந்திவிட்டு, சீரடிக்கு இன்னும் எவ்வளவு தூரம் என்று விசாரித்தேன். இங்கிருந்து 18 கிலோ மீட்டர் தூரம் என்றார்கள். அருகில் வந்துவிட்டோம் என்று உணர்ந்ததும் மனம் அமைதியாகவில்லை. அதற்குப்பதில் பதட்டமாகிவிட்டது.

சாலையோரம் ஒரு மரத்தடியில் சற்றுநேரம் அமர்ந்து ஓய்வெடுத்தேன். சிறிதுநேரம்தான் இருக்கும். அதற்குள் மனம் புறப்படு, புறப்படு என்று

கட்டளையிட என்னால் அங்கே அமர்ந்திருக்கவே முடியவில்லை. உடனே புறப்பட்டு நடக்க ஆரம்பித்தேன். மணி ஒன்பதாயிற்று பத்து கிலோ மீட்டர் கடந்துவிட்டேன். இன்னும் எட்டு கிலோ மீட்டர்தான். பாபாவை பார்க்கப்போகிறேன். மனம் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் கண்கள் கண்ணீரை சொரிந்த வண்ணம் இருந்தது.

என் எதிரில் வருபவர்களை நான் அப்போது சட்டை செய்யவில்லை. என்னைப் பார்த்தால் அவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதைப்பற்றி எல்லாம் அப்போது எனக்கு எந்த நினைவும் இல்லை. ஏறக்குறைய பித்து பிடித்த நிலை. தெய்வப் பித்து.

அதனால்தான் எண்ணவோ கொஞ்சமும் எனக்கு பசி என்பதே இல்லை. ஒருவாறாக என் கர்மவினை தீரும் கட்டத்திற்கு வந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஆம், மதியம் ஒரு மணி இருக்கும். இதுவரை கர்ம வினைகளை சுமந்து திரிந்த இந்த சதைப்பிண்டம் பாபவிமோசனம் பெறுவதற்காக சீரடி மண்ணினுள் கால் வைத்தது.

எப்பிறப்பினில் எத்தவம் புரிந்தேனோ!

இப்பிறப்பினில் இத்தரையை மிதிப்பதற்கு! என்று உள்ளம் உவகை கொள்ள, இனியொன்றும் பயமில்லை. என் தகப்பனின் எல்லைக்கு வந்துவிட்டேன் என்ற சுதந்திரக் காற்றை என் நுரையீரல் பரிபூரணமாய் ஆழ்ந்து சுவாசித்தது. புதிய உலகம் என்னை ஆரவாரமாய் வரவேற்றது. மனம் சட்டென்று மகிழ்ச்சி கொள்ள, சீரடியின் மண் என் காலுக்குள்ளாக சக்தியூட்டியது.

வழி நெடுக உணவு விடுதிகளும், தங்கும் விடுதிகளும், சாலையோர பானிப்பூரி கடைகளும், குதிரை வண்டியும், ஒட்டக உயரமும், மும்பைக்கு விரையும் வாகனங்களும், வெங்காய முட்டைகள் ஏற்றிய வண்டிகளும், பல மாகாண பக்தர்களும், சாயி மந்திர்க்கு வழிகாட்டும் வழிகாட்டிகளும், பூஜா திரவிய நிலையங்களும், என் கண்களுக்குள் நுழைந்தாலும், எனக்கும் என் சாயி சிந்தனைக் குள்ளும் நுழையவே இல்லை.

ஒருவழியாக சீரடி பேரூந்து நிலையத்திற்கு வந்து நின்று சுற்றும் முற்றும் பார்த்தேன். சற்று தூரத்தில் பாபா கோவிலின் கோபுரம் போல் தெரிய அதை நோக்கி நடந்தேன். ஆம் முடிவாக என் சென்மம் புனித மடைந்தது. என் மனம் சிலிர்த்தது வந்துவிட்டேன். பாபாவின் ஆலயத்திற்கு வந்துவிட்டேன். என்னவோ தெரியவில்லை. என் வாழ்க்கையில் அன்றுதான் நான் மிகவும் பாதுகாப்பாய் இருப்பதாய் உணர்ந்தேன். அப்பாடா என்றிருந்தது.

சமாதி மந்திர்க்கு செல்லும் பக்தர்களை வழிநெடுக வியாபாரிகள் இதை வாங்கிக்கொள்ளுங்கள், அதை வாங்கிக்கொள்ளுங்கள் என்று வழிமறித்து இடைஞ்சல் செய்து கொண்டிருந்தனர். இடையில் பிச்சைக் காரர்களின் தொந்தரவு வேறு. ஆனால் என்னை யாரும் எந்த தொந்தரவும் செய்யவில்லை. சமாதி மந்திரை இரண்டு முறை சுற்றி வந்தேன். எந்த வழியாக உள்ளே செல்வது என்று புரியவில்லை.

சமாதி ஆலயத்திற்கு முன்பாக

ஆஞ்சநேயர் கோவிலின் பின்புறம் ஆங்காங்கே மரங்கள் நிழலை பரப்பிக்கொண்டு நின்றிருக்கும். அங்கேதான் சமான்ய பக்தர்கள் இரவு உறங்குவார்கள். அன்றைய சமஸ்தானும் பக்தர்கள் அங்கே ஓய்வெடுக்க அனுமதித்திருந்தது. அங்கே சென்று நானும் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டேன்.

மனம் சற்று அமைதியாய் இருந்தது. நடந்துவந்த களைப்பு மெல்ல எட்டிப்பார்த்து. மாலை நெருங்க, நெருங்க, பக்தர்கள் சாரை சாரையாக வர ஆரம்பித்தனர். எங்கிருந்தோ பாபாவின் பல்லக்கை சுமந்துவந்த பக்தர்கள் அங்கே இறக்கி வைத்து ஓய்வெடுத்தார்கள். இருட்டும் நேரம் ஆலயம் முழுவதும் ஒரே கோலாகலமாக இருந்தது. அன்று வியாக்கிழமை என்று அப்போதுதான் தெரிந்துகொண்டேன்.

வியாழன் பல்லக்கு ஊர்வலத்தை காண கண்கோடி வேண்டும். நான் வாழ்க்கையில் முதன்முதலாக பார்ப்பதால் வியந்து போய் வேடிக்கை பார்த்துக்கொண்டே இருக்கிறேன். மேளதாளத்துடன் இளைஞர்களும், இளைஞிகளும் ஆடிக்கொண்டே செல்ல, கொடிபிடித்த இளைஞர்கள் வீரநடை போட, குதிரை ஒன்று சர்வ அலங்காரத்துடன் முன்னால் போக, சர்வ நிதர்சனமாய் பாபா தன் அடியவர்களுடன் மெல்ல நடந்து, பக்தர்களுக்கு ஆசிவழங்கிக்கொண்டே செல்ல, நான் காலத்தின் பின் நோக்கிச்சென்று பாபாவின் காலத் திற்கே சென்றுவிட்டேன்.

பாபா ரத்தமும் சதையுமாய் நடந்துவர நான் அவரின்முன் சென்று வணங்க அவர் என்னை புன்முறுவலுடன் ஆசீர்வதித்து செல்கிறார். இதற்குமேல் எனக்கு என்ன வேண்டும். கைகளை கூப்பி வணங்கிவிட்டு வானத்தை நோக்கி கைகளை நீட்ட,யாரோ ஒரு பெண்மணி இலை நிறைய கிச்சடி யையும், கேசரியையும் என் கையில் திணித்துவிட்டு செல்கிறாள்.

பாபாவையும் பார்த்தாயிற்று, பிரசாதமும் கிடைத்தாயிற்று. உண்ட மயக்கத்தில் அப்படியே அந்த இடத்திலேயே படுத்து உறங்க ஆரப்பித்தேன். ஆலயத்திற்கு வந்ததும் உள்ளே சென்று பாபாவை பார்க்கவேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஏன் என்றால் நான் பாபாவை பார்க்க மட்டும் வரவில்லை. அவருடன் இருக்கவே வந்திருக்கிறேன் அதனால்தான் வந்தவேலை நிறைவடைந்த ஆனந்தத்தில் ஆழ்ந்து உறங்கி விட்டேன்.

அதிகாலை நான்கு மணியிருக்கும். மெதுவாக கண் விழித்துப் பார்க்கிறேன். என்னைச் சுற்றி ஆறேழு பைரவர்கள் நெருக்கமாகப் படுத்திருக்கின்றார்கள். எப்பொழுதும் எனக்கு பைரவர்கள் என்றால் சற்று பயம். அதுநாள்வரை பைரவர்களை நான் தொட்டு பார்த்தது கூட கிடையாது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டு எழுந்து போய் சற்று தள்ளி அமர்ந்து கொண்டேன்.

நான் எழுந்து கொண்ட வேகத்தில் எல்லா பைரவர்களும் எழுந்து ஓடிப் போனார்கள். ஓரே ஒரு பைரவரைத் தவிர. எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தேன். சற்று தூரத்தில் சனஸ்தானின் தேனீர் கடை திறந்திருந்தது. தேனீர் ஒரு ரூபாய் என்ற

விளம்பர போர்டை கண்டேன். என்னிடம் சில்லரைக்காசு எட்டு ரூபாய் மட்டும் இருந்தது.

தேனீர் ஒரு ரூபாய் தானே, ஒரு தேனீர் குடிக்கலாம் என்று கடைக்குச்சென்று தேனீர் கேட்டேன். கடைக்காரர் என்னை ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு தேனீர் கொடுத்தார். நான் தேனீரைக்குடித்துக் கொண்டே கடையில் இருக்கும் கண்ணாடியில் என்னைப் பார்த்தேன். எனக்கே அருவருப்பாய் இருந்தது.

நடந்துவந்த களைப்பால் கண்கள் பஞ்சடைந்துபோய் இருந்தது. தலை வாறப்படாமல் கலைந்துபோய் உடல் முழுவதும் அழுக்காய் பைத்தியம் போல் இருந்தேன். ஓ! அதனால்தான் ஒருவரும் என்னை கண்டு கொள்ளவில்லை போலும் என்றவாறு மீண்டும் அங்கேயே வந்து அமர்ந்து கொண்டேன். பைரவரும் என்னுடனே வந்து மீண்டும் அமர்ந்து கொண்டார்.

காலையில் காக்கட ஆரத்தியில் கலந்து கொள்ள பக்தர்கள் கூட்டம் கூட்டமாக சமாதி மந்திருக்குள் சென்று கொண்டிருக்க, எனக்கு ஏனோ உள்ளே சென்று பாபாவின் சமாதியை தரிசிக்க வேண்டும் என்ற எண்ணமே இல்லை. பையை எடுத்துக்கொண்டு முதலில் எங்காவது சென்று குளிக்கலாம் என்றவாறே ஆலயத்தை சுற்றி வந்தேன்.

ஓரிடத்தில் இலவச குளியலறை இருப்பதைக்கண்டு அங்கு சென்று குளித்துவிட்டு, மீண்டும் நான் அமர்ந்திருந்த இடத்திற்கே வந்து அமர்ந்து கொண்டேன். பைரவரும் என்னுடனே இருந்தது.



பொழுதுவிடிந்தது. பக்தர்கள் குடும்பம், குடும்பமாக ஆலயத்திற்குள் போவதும் வருவதுமாக இருந்தனர். அவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்த எனக்குள் வீட்டின் ஞாபகம் வர ஆரம்பித்தது. எனது மனைவி குழந்தைகளுடன் இங்கு வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். காலத்தின் கோலத்தால் நான் மட்டும் இங்கு வருவதுமாதிரி ஆகிவிட்டதே!

எல்லாம் பாபாவினால்தான். நான் உள்ளே போய் பாபாவை பார்க்கமாட்டேன். என் மீது கருணை இருந்தால் பாபாவே என்னை வந்து அழைத்துப்போகட்டும். அதுவரை நான் உள்ளே செல்லமாட்டேன் என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டேன்.

மணி காலை பத்தாகிவிட்டது. பசிப்பதுபோல் இருந்தது. என்னிடம்

இப்போது தேனீருக்கு ஒரு ரூபாய் போக மீதி ஏழு ரூபாய் மட்டுமே இருந்தது. அது சாப்பாட்டிற்குப் போதாது. கோவில் என்றால் இலவச சாப்பாடு போடுவார்களே, அது எங்கு என்று தெரிந்தால் அங்காவது சென்று சாப்பிடலாம். என்றவாறே பைரவரைப் பார்த்தேன். பாவம் இதுவும் காலையில் இருந்து என்னுடனேயே இருக்கிறது. சாப்பிட்டதா, இல்லையா என்று தெரியவில்லை என்று மனதிற்குள் யோசித்தேன்.

நான் பைரவரைப்பார்த்த அந்த நொடி, நான் யோசித்ததை புரிந்து கொண்டதைப்போல் அந்தப் பைரவர் சட்டென்று எழுந்து உடலை உதறிக்கொண்டது. பின்பு என்னையே பார்த்துக்கொண்டிருந்தது. அடுத்த விநாடி எனது வேட்டியை தன் வாயால் கவ்வியபடி என்னை இழுத்தது. நான் இருக்கும் ஒரு வேட்டியும் கிழிந்துவிடப் போகிறதே என்று அதனிடம் இருந்து விடுவிப்பதற்காக உடனே எழுந்து கொண்டேன்.

உடனே அந்த பைரவர் எனது வேட்டியை விட்டுவிட்டு, எனது முன்னால் சற்று தூரம் நடந்து, பின் நின்று திரும்பி என்னைப் பார்த்தது. நான் பழையபடி எனது இடத்தில் போய் அமர்ந்து கொண்டேன். பைரவர் மீண்டும் வந்து எனது வேட்டியை கவ்வி இழுத்தது. நான் பழையபடி எழுந்து கொண்டேன். பைரவரும் முன்பு போலவே செய்தது.

இப்படியாக நான்கு முறை நடந்தது. ஐந்தாவது முறை நான் பைரவரின் பின்னால் இரண்டடி நடந்தேன். திரும்பிப்பார்த்த பைரவரும் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தது. நானும் ஏதோ ஒரு குருட்டு தைரியத்தில் அதன்பின்னே நடக்க ஆரம்பித்தேன். பைரவர் ஆலய வளாகத்தை விட்டு வெளியேறி மும்பை செல்லும் சாலையில் நடக்க ஆரம்பித்தது.

நான் சந்தேகப்பட்டு சற்று நின்றால் உடனே என்னை நோக்கி வந்து என் வேட்டியை கவ்வ ஆரம்பித்துவிடும். இப்படியாக என்னை அந்த பைரவர் பிரசாதாலயாவிற்கு அழைத்துவந்து விட்டார். நான் தூரத்தில் இருந்தே அன்னபாபாவின் சிலையைப் பார்த்து புரிந்து கொண்டேன். பாபாவின் கருணையை என்னவென்பேன். பைரவரை தொட்டு தடவிக் கொடுத்தேன்.

என் வாழ்க்கையில் அதுவரை ஒரு பைரவரை தொட்டு தடவிக்கொடுத்தது இல்லை. இதுவே முதல்முறை. நான் அதை தொட்டவுடன் உடனே அந்த பைரவர் என்னைவிட்டு ஓடி மறைந்தது.

பிறகு பிரசாதாலயா சென்று வயிறார அன்னபிரசாதம் உண்டு மகிழ்ந்தேன். அன்றுமட்டுமல்ல! சீரடியில் தங்கிய ஏழு நாட்களும் பிரசாதாலயாவே எனது பசியை தீர்த்து வைத்தது.

உணவு உண்டுவிட்டு மீண்டும் சமாதி மந்திர் வந்து நான் ஏற்கனவே அமர்ந்த இடத்திலேயே மீண்டும் அமர்ந்து கொண்டேன். பிரசாதாலயாவிற்கு வழிகாட்டிய பைரவரை காணோம். என்ன அதிசயம். நான் மனதிற்குள் நினைத்ததை அந்த பைரவர் எப்படி தெரிந்து கொண்டது.

என்னை பிரசாதாலயா வரை கூட்டிச்சென்று விட்டதே! பாவம் பைரவர் சாப்பிட்டதோ எண்ணவோ என்று சிந்தித்தவாறு பக்தர்களை

வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தேன்.

பல மொழிகளைப் பேசிக்கொண்டு பலவிமான உடைகளை உடுத்திக் கொண்டு, சாதி பேதமின்றி, இன பேதமின்றி, ஏழை, பணக்காரர் வித்தியாசமின்றி, அனைவரும் சாயிநாத் மகராஜ்கி ஜே! என்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு போவதும், வருவதுமாய், சீரடி ஏதோ மாயாஜால உலகம் போல் எனக்கு காட்சியளித்தது.

இந்த மக்களைப் பார்க்கையில் ஒருபுறம் கவலைகளை மறக்க நினைத்தாலும், மறுபுறம் என்னை மட்டும் ஏன் இப்படி சோதித்தாய் பாபா என்றே புலம்பத்தோன்றியது. என்னுடைய கம்பெனி பெருத்த நஷ்ட மடைந்து எனது நிதி ஆதாரத்தையே குலைத்துவிட்டது. சாயிநாதா, இன்றைய தேதியில் என்னிடம் ஏழு ரூபாய் மட்டுமே இருப்பு இருக்கின்றது.

என்னுடைய எதிர்காலம் தான் என்ன? இனியும் என்னால் முன்னேற முடியுமா? என் மனைவி குழந்தைகளை நன்றாக கவனித்துக்கொள்ள முடியுமா? எதிர்பாராத மிக உயரத்திற்கு என்னை ஏற்றிவிட்டு, தொப்பென்று கீழே போட்டுவிட்டாயே இது நியாயமா?

எல்லாவற்றையும் இழந்து நிற்கின்றேன். என்னை எப்படி இந்த இக்கட்டில் இருந்து மீட்கப்போகிறாய் சாயிநாதா. நான் அனைத்தையும் இழந்து நிர்கதியாகி உன்னைதேடி வந்து விட்டேன். இங்குவந்தும் ஏனோ உன்னைப் பார்க்க என் மனம் தடைபோடுகிறது.

சாயி, இப்போது நான் என்ன செய்வது? எனக்கு புரியவில்லை. இப்படியே எத்தனை நாள்தான் உட்கார்ந்து இருக்கப் போகிறேன் தெரிய வில்லையே? என்ற வாறே மனதிற்குள் புலம்பித்தவித்தவாறு வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தேன்.

சட்டென்று எனக்கு பணம் தரவேண்டிய வியாபாரியின் ஞாபகம் வந்தது. சீரடிக்கு வந்ததும் போன் பண்ணச் சொன்னாரே என்றவாறு எழுந்து எஸ்.டி.டி பூத்திற்குச்சென்று என்னிடம் இருந்த நாணயத்தை போட்டு வியாபாரியிடம் பேச முயற்சித்தேன்,

என் நேரம் லைன் கிடைத்த உடனே கட்டாகி விடுகின்றது. அடுத்தடுத்து முயற்சிக்க என்னிடம் இருந்த ஆறு ரூபாய்களையும் எஸ்.டி.டி பூத் விழுங்கிவிட்டது. மீதம் இருக்கும் ஒரு ரூபாயை எடுத்துக் கொண்டு பழையபடி நான் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து அமர்ந்து கொண்டு மவுனமாக மக்களை வெறித்தபடி பார்த்துக்கொண்டே இருந்தேன்.

பத்து நிமிடம் கழித்து என்னை பிரசாதாலயாவில் விட்ட பைரவர் என் அருகில் வந்து அமர்ந்துகொண்டது.

– தொடரும்...

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

ஷீரடி ஸ்ரீ கணேஷ் சாய்பாபா கோவில்



பாரதம் ஞானத்தின் தேசம். பக்தர்களின் துயரங்களைப் போக்கவும்,ஞானப் பாதையை நோக்கி மக்களை வழிநடத்தவும் பல முனிவர்கள் இந்த பாரத தேசத்தில் அவதரித்துள்ளனர். அதில் சென்ற நூற்றாண்டில் அவதரித்த சீரடி சாயி பாபா மத ஒற்றுமைக்காகவும், அனைத்து உயிர்களையும் நேசிக்கவும் தன் வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்த ஞானயோகியாவார்.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான சீரடி சாயி நாதருக்கு அவரின் அடியவர்களால் உலகம் முழுவதும் ஆலயங்கள் எழுப்பபட்டு வரைகின்றது. அவ்வகையில், தமிழ்நாடு திருச்சிராப்பள்ளியின் அருகில் உள்ள கீழ வயலூரில் ஷீரடி ஸ்ரீ கணேச சாய்பாபா என்ற பெயரில் ஆலயம் எழப்பப்பட்டிருக்கின்றது.

27 அக்டோபர் 2014 அன்று ஆலயம் எழுப்பிய திரு. சுவாமிநாதன் அவர்களின் கனவில் தோன்றிய பாபா கீழவயலூரில் கோயில் கட்ட ஆணையிட்டு தரிசனம் அளித்து ஆசிர்வதித்திருக்கின்றார்.

பிறகு மூன்றாவது வியாழன் அன்று அவரது கனவில் பாபா வந்து, ஆலயம் எழுப்பி விக்கிரகத்தை மேற்கு நோக்கி வைக்கும்படியும், சிலை தானாக எந்தப்பக்கம் எழுந்தருள வேண்டுமோ அந்தப்பக்கம் திரும்பிக்கொள்ளும் என்றும், நான்காவது வியாழன் அன்று நடக்கும் ஆரத்தியின் போது யானை வந்து ஆசிர்வதிக்கும் என்று கூறியிருக்கிறார்.

2017 ஜூலை 6 ஆம் தேதி கீழவயலூர் கிராமத்தில் சாயி பாபா கோவில் கட்டும் பணியை தொடங்க பூமி பூஜை நடத்தப்பட்டது. 2017 ஆம் ஆகஸ்ட் 30 ஆம் தேதி பாபாவின் பளிங்குச் சிலை நிறுவப்பட்டது.

பாபா கனவில் வந்து கூறியதைப் போன்றே கிழக்கு முகமாக வைக்கப்பட்ட பாபாவின் பளிங்குச்சிலை தானாகவே தெற்கு முகமாக திரும்பிக்கொண்டதாம். நான்காவது வாரம் வியாழக்கிழமை அன்று ஆரத்தியின்போது யானை வந்து ஆசீர்வதித்திருக்கின்றது.

இந்தச் செய்தியை கேள்விப்பட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து திரளான கிராம மக்களும், பக்தர்களும் தினமும் பாபாவின் தரிசனத்திற்கு வரத் தொடங்கினர். ஒவ்வொரு வாரமும் வியாழன் அன்று நான்குவேளை ஆரத்தியும், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 1000 முதல் 1500 பேருக்கு அன்ன பிரசாதமாக முழு உணவும் வழங்கப்படுகிறது.

மேலும் ஆலய வளாகத்தில் சுமார் 5000 சதுர அடி பரப்பளவில் கல்யாண மண்டபம் மற்றும், 1500 சதுர அடியில் முழுவதும் கருங்கல்லால் ஆன ஷீரடியின் துவாரகாமாயின் பிரதியை உருவாக்கும் கட்டுமானமும் நடைபெற்று வருகிறது.

அகஸ்தீஸ்வரர் கோவில், பெருங்குடி சிவன் கோவில், கீழவயலூர் விநாயகர் சாய்பாபா கோவில், மற்றும் வயலூர் முருகன் கோவில் ஆகியவை ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளது.



மிகச்சிறப்பாக கருத்தப்படுகிறது.

இந்த கோவில் தமிழ்நாட்டின் மையப்புள்ளியான புகழ்பெற்ற மலைக்கோவில் அமைந்திருக்கும் திருச்சியின் மிக அருகில் கீழ வயலூர் என்ற அமைதியான, பசுமையான கிராமத்தில் அமைந்துள்ளது. அனைத்து சாய் பக்தர்களும் வருகை தந்து ஸ்ரீ சீரடி கணேச சாய்பாபாவின் அருளைப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.



ஆலய முகவரி:

ஸ்ரீ சீரடி கணேச சாய்பாபாவின்
கீழ வயலூர்,
சோமரசம் பேட்டை,
திருச்சிராப்பள்ளி 620 102.

போன்:

9698416442, 7598241609

சுமூகமே சமூகம்



அய்யோ நம்மை யாரும் புரிந்து கொள்வதில்லை! நாம் என்ன சொன்னாலும் நம் குடும்பம் காது கொடுத்து கேட்பதில்லை, நம்மை மதிப்பதே இல்லை. போன்ற உணர்வு நம்மில் நிறைய பேருக்கு இருக்கிறது! இது தவறான அணுகுமுறை!

நமது குடும்பத்தில் இருப்பவர்கள் யாரும் ஞான விழிப்படைந்த புத்தர்கள் இல்லை! நம் மனதில் இருப்பதை வெளிப்படுத்தாமலேயே உணர்ந்து கொள்ள அவர்கள் பேரிறைவன் பாபாவும் இல்லை! ஆக நாம் தான் அவர்களோடு மனம் திறந்து மென்மையாகப் பேச வேண்டும்!

அவர்களின் எதிர்வினைப் பகிர்வையும் காது கொடுத்து கேட்க வேண்டும்! ஆற அமர பேசுகிற போது உலக யுத்தத்தையே நிறுத்த முடியும் எனில் நமது குடும்பப் பிரச்சினை எம்மாத்திரம்!? பெரும்பாலான குடும்பப் பிரச்சனைகள் நமது சொந்த கற்பனையாலேயே அதிகமாகிறது! கைகளின் விரல்கள் மட்டுமல்ல நமது முடிகள் கூட ஒரே மாதிரி இல்லை!

நமது குடும்பப் பிரச்சனைக்கு ஒரே காரணம் நம்முடைய எதிர்பார்ப்பே! எதிர்பார்ப்பை விட்டு விட்டு அவரவர்களை அவரவர்களாகவே அப்படியே ஏற்போம்! ஒவ்வொரையும் அவரவர் தனித்தனி பூர்வ கர்மாவே இயக்குகிறது! இதனை நாம் உணர்ந்தால் குடும்பம் மட்டுமல்ல நமது சமூகமே சுமூகமாகிறது.

நிம்மதியே சாயி சந்நதி!

வாழ்வில் நிகழ்வது அனைத்துமே நமது நன்மைக்காகவே என்று நாம் உணர வேண்டும்! இது வெறும் சமாதானத்திற்கான வார்த்தை அல்ல. சத்தியமும் அது தான்! முற்பிறவிகளில் நாம் ஈட்டிய பாவ,புண்ணியத்தை கரைப்பதற்கே நமக்கு மீண்டும் மீண்டும் பிறவி வாய்க்கிறது!

சிலர் பாவத்தை கரைக்க கஷ்டப்படுகிறார்கள்! சிலர் மேலும், மேலும், தீமை செய்து பாவ கர்மாவை அதிகரித்துக் கொள்கிறார்கள். சிலர் புண்ணியத்தை கரைத்தபடி சுக போக வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள்! சிலர் கஷ்டப்படுவர்களை ஏமாற்றியும் ஏளனப்படுத்தியும், சிறிதும் நன்மை புரியாமல் பாவங்களைச் சேர்க்கிறார்கள்!

இது எப்படி இருக்கிறது எனில் சந்தனக் கட்டையை சிரமப்பட்டு தேய்த்து தேய்த்து சந்தனம் எடுத்து சாக்கடையில் கொட்டிவிடுவது போல் இருக்கிறதல்லவா? சுக போகிகள் பயனற்ற கோமாளிகள். அவர்களை தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்து அவர்கள் போல் நாமும் வாழ முடியவில்லையே என்று ஏக்கப்படாமல், இறைவன் பாபாவின் பாதத்தை சரணடையுங்கள். அதுவே நமக்கு நிம்மதியைத் தரும்.

இலவச சீரடி புனிதப் பயணம்

நமது சாயி மகராஜ் குருவைதேடி ஆன்மீக மாத இதழின் சந்தாதாரர்களுக்கு,"இலவச சீரடி தரிசன வாய்பை" வழங்குகிறோம்.

ஆயுள் சந்தாதாரர்களில் ஒரு அதிர்ஷ்டசாலி குழுக்கலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு சாய் தியானாலயா நடத்தும் 6 நாள் சீரடி புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும், 5 வருட சந்தாதாரர்களில் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்பட்டு 4 நாள் சீரடி புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் இலவசமாக பெறுவார்கள்.

3 வருட சந்தாதாரர்களில் ஒருவருக்கு ரூ.1000 மதிப்புள்ள சிறப்பு பரிசும், 1 வருட சந்தாதார்களில் ஒருவருக்கு ரூ.500 மதிப்புள்ள சிறப்பு பரிசும் வழங்கப்படும்.

ஏற்கனவே உள்ள சந்தாதாரர்களையும் சேர்த்து, வரும், 31.12.2023 வரை இணையும் புதிய சந்தாதாரர்களுடன் வருகின்ற 07.01.2024 அன்று நடைபெறும் 66 வது புத்தக வெளியீட்டு விழாவில், பக்தர்களின் முன்னிலையில் குலுக்கல் நடத்தப்பட்டு அதிர்ஷ்டசாலி சந்தாதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

சந்தா கட்டுங்கள்! அதிர்ஷ்ட வாய்பை பெறுங்கள்!

1 வருட சந்தா – ரூ. 220 / 3 வருட சந்தா – ரூ. 550
5 வருட சந்தா – ரூ.1000 / ஆயுள் சந்தா – ரூ. 2000

தொடர்புக்கு:

ஆசிரியர், V. ஸ்ரீராம், செல்: 99418 16692

மணமகள் தேவை

JAYAPAL.D



Caste - Konar
DOB - 02/04/1997
Blood Group :- A+
Height -159
Weight - 65
Education :-D.M.E
Occupation :- Anantham Silks Super Visor
Income :- 20000 Per Month
Family Background
Father :- Dharmalingam(Death)
Mother - Krishnammal (Death)
Brother :- Jayaram B.sc Optometrist Unmarried
Property - Own House
Address :- Dharmalingam,
1/35North Street,chennampatti Madurai 625701
Email :- ananthamjayabal@gmail.com /
Contact :- 8072806070 9626980923

சாய் தியானாலயா தவ மையம் வழங்கும் 12வது புனித யாத்திரை

ONE & ONLY SHIRDI


4 நாட்கள், கட்டணம்: 3750/-

புறப்படும் நாள்: 06.03.2024 புதன்கிழமை

பார்க்கும் இடங்கள்: சீரடி ஸ்ரீ சாய் பாபா மந்திர், துவாரகாமாயி, சாவடி, லெண்டி பார்க், அப்துல்பாபா சமாதி, அடியவர்களின் சமாதி, லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, மாதவராவ் வீடு, பையாஜி வீடு, சிவநேசன் சமாதி, கந்தோபா ஆலயம், ரஹதா உபாசினி மகராஜ், குஷால்சந்த் வீடு, கற்பக விருட்சம், பஞ்சமுக கணபதி, வீரபத்ரா கோவில், ஜூவாலமுகி ஆலயம் ஓல்ட் சீரடி.

புனித யாத்திரையில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் 01.11.2023க்குள் ரூ.2000/ செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.

குரு ஸ்ரீராம்சாய் அவர்களுடன் சத்சங்கம், தியானத்துடன் ஓர் ஆனந்தப்பயணம்



சாய் தியானாலயா ஆத்மஞான பீடம் 99418 6692

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.



அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

உடல் பருமனைக் குறைக்கும் முட்டைக்கோஸ்

அயோடின் உப்பு பற்றி அதிகம் பேசப்படுகிறது. அந்த உப்பு அதிகம் உள்ள இயற்கையாகவே அமைந்துள்ள காய்கறி, முட்டைக்கோஸாகும்.

முட்டைக்கோஸ் உண்மையில் கீரைவகையைச் சோந்ததாகும்.

தெற்கு ஐரோப்பாவிலும், மத்திய தரைக்கடல் பகுதிகளிலும், இங்கிலாந்திலும், வடமேற்கு பிரான்சிலும்தான் இந்தக் கீரை முதலில் தோன்றியது. மேற்கண்ட இடங்களில் பச்சை, சிவப்பு, நீலம் போன்ற நிறங்களிலும், விதவிதமான வடிவங்களிலும் முட்டைகோஸ் பயிராகிறது.

முட்டைகோஸ் மூன்று முக்கிய காரணங்களுக்காக அதிகம் உண்ணப் படுகிறது. உயர்தரமான தாது உப்புகள், வைட்டமின்கள், சுண்ணாம் புச்சத்து ஆகிய அமிலங்களுக்காக அதிகம் சாப்பிடுகின்றனர்.

உடலின் உள்ளுறுப்புக்களை நன்கு சுத்தப்படுத்துவதில் முட்டைகோஸிற்கு முக்கிய இடம் உண்டு. இதில் உள்ள கந்தகச்சத்து, குளோரின், அயோடின் போன்றவை குடலில் உள்ள சளிச்சவ்வு முதலியவற்றை வெளியேற்றி குடலை நன்கு தூய்மையாக்கிவிடுகிறது.

மேற்கண்ட நன்மையைப் பெற முட்டைக் கோஸைச் சமைக்காமல் அரிந்து பச்சையாகவோ, சூஸாகவோ சாப்பிடவேண்டும். இரண்டாவது, சூஸில் உப்பு சேர்க்கக் கூடாது. மூன்றாவது, முட்டைக்கோஸை எந்த நேரத்தில் சாப்பிட்டாலும் இன்னொரு காய்கறியுடன் சேர்த்துத்தான் சாப்பிட வேண்டும். சமைக்கும்போது முட்டைக்கோஸுடன் காரட், பீன்ஸ் போன்றவற்றையும் சேர்த்துச் சமைக்கவேண்டும். பயறு வகைகள் சேர்வதும் நலமே!

சமைத்துச் சாப்பிடுவதைவிட பச்சையாகச் சாப்பிடும் முட்டைக் கோஸில் மதிப்பு மிக்க ஊட்டச்சத்து நிறைய நம் உடலுக்குக் கிடைக்கிறது. சமைக்கப்பட்டதை விட பச்சையான கோஸ் விரைவாகச் செரிமானம் ஆகும்

பச்சையாகச் சாப்பிடும்போது அளவுடன்தான் சாப்பிடவேண்டும். காரணம், இது கசப்பாகவும் இருக்கும். சூஸின் அளவு அதிகமாகும் போது குரல்வளைச் சுரப்பியில் வீக்கம் ஏற்பட்டு விடுகிறது. மருந்து போல் அளவுடன் பயன்படுத்துவதால் தொற்றுநோய்,புண்கள், முகப்பருக்கள், கொப்பளங்கள், செரிமானக் கோளாறுகள் முதலியவை உடனே குணமாகின்றன. இவை எல்லாம் ஏற்படாமலும் முன்கூட்டியே தவிர்த்துவிடுகின்றன.

சமைக்காமல் இப்படிச் சாப்பிடு வதால் இன்னொரு மாபெரும் நன்மையும் உண்டு. உடல் எப்போதும் இளமைத் தோற்றத்துடனும், பிளீச்சிங் செய்த முகம் போலவும் பொலிவுடனும் மலர்ச்சியுடனும் முகம் விளங்கும். இந்த நன்மையைப் பெறக் கேரட் சாறுடன் முட்டைக்கோஸ் சாற்றையும் உப்பு சேர்க்காமல் கலந்து அருந்துங்கள்.

நாள் முழுவதும் வெயிலில்



அலைந்து வேலை பார்ப்பவர்களும், வரவேற் பறையில் அமர்ந்து பணிபுரியும் பெண்களும் அடிக்கடி பிளீச்சிங், பவுடர் போன்றவற்றை நாடுவதை இது குறைத்துவிடும். எவ்வளவு நேரம் அலைந்தாலும், வேலை பார்த்தாலும் முகத்தில் எண்ணெய் வழியாது. உடலில் நோய் எதிர்ப்புச்சக்தியும் அதிகரிக்கிறது. திசு அணுக்களைப் புதுப்பித்து நன்கு ஆற்றலுடன் செயல் படவும் இந்தச் சாறு பயன்படுகிறது.

100 கிராம் முட்டைக்கோஸில் மாவுச்சத்து 4.6 சதவிகிதமும், புரதம் 1.8 சதவிகிதமும், சுண்ணாம்புச்சத்து 39 மில்லி கிராமும், பாஸ்பரஸ் 45 மில்லிகிராமும், வைட்டமின் சி 124 மில்லி கிராமமும், சிறிதளவு இரும்புச்சத்தும், வைட்டமின் 'ஏ' யும், வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸும் அதிக அளவில் உள்ளன.

முட்டைக்கோஸ் சாப்பிடுவது கண்பார்வைத் தெளிவைக் கூர்மைப் படுத்தும். 100 கிராம் முட்டைக்கோஸில் வைட்டமின் 'ஏ' மட்டும் 130 சர்வதேச அலகு உள்ளன.

மலச்சிக்கல் உடனே குணமாகப் பச்சை முட்டைக்கோஸை அரிந்து கொள்ளுங்கள். அதனுடன் சிறிதளவு மிளகு சேர்த்து எலுமிச்சம் பழ இரசத்தில் கலந்து அருந்தினால் போதும். மலச்சிக்கல் ஏற்படாமல் இருக்க ஒரு நாள் விட்டு ஒரு நாள் முட்டைக்கோஸ் பொரியல் தயாரித்து மதிய உணவுடன் சாப்பிட வேண்டும்.

வயிற்றுப்புண் குணமாக 75 கிராம் முட்டைக்கோஸ் இரசத்தைத் தினமும் மூன்று வேளை வீதம் சாப்பிட வேண்டும். இதில் உப்போ வேறு காய்கறிகளோ சேர்க்கக்கூடாது.

100 கிராம், முட்டைக்கோஸ் தரும் சக்தியின் கலோரி அளவு 27தான். எனவே, உடல் பருமன் குறைந்து ஒல்லியான தோற்றத்தில் அழகாகக் காட்சியளிக்க விரும்புகிறவர்கள், உடலுக்கோ, மனத்திற்கோ அதிகம் சிரமம் தராத முட்டைக்கோஸ் சாற்றையே அருந்தினால் போதும், வியக்கத்தக்க முறையில் உடல் பருமன் குறைந்து குணமாகிவிடுவீர்கள்.

இதனால் சொறிசிரங்கு குணமாகும். வயதுக்கு முந்தியே முதுமைத் தோற்றம் அடைவது கட்டுப்படுத்தப்படுகிறது. முதுமையிலும் இளமைத் தோற்றத்துடன் திகழ உடல் வலுப்பெற முட்டைக்கோஸையும் தொடர்ந்து உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

பார்வைக்கோளாறு, மூட்டு வீக்கம், பல்வியாதிகள், இரத்தசோகை, வெண்குஷ்டம, இரைப்பை எரிச்சல், மூலவியாதி, இருமல், வயிற்றுப்பொருமல் ஆகியவை குணமாகும். வைட்டமின் 'யு' என்னும் பொருள் இதில் இருக்கிறது. அதுவே வயிற்றுப் புண்களை முற்றிலும் குணமாக்கி விடுகிறது. இரத்தம் சுத்தம் பெறவும் தினமும் முட்டைக்கோஸை சமையல் செய்து உணவுடன் சாப்பிட்டு வர நன்மை கிடைக்கும்.

அனைத்து வயதினருக்கும் முட்டைக் கோஸ் மிக முக்கியமான உணவு, மருந்து என்பதை மறந்து விடாதீர்கள்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

சீரடி சாயி 105

கலியுகத்தின் கண்கண்ட கடவுள் பகவான் சீரடி சாயிநாதன் 1918 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ந்தேதி மகாசமாதி அடைந்தார். இவ்வருடம் 105 வது சமாதி வருடத்தை முன்னிட்டு பாபாவைப்பற்றிய 105 தகவல்கள் உங்களுக்காக தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

1. "சாயி" என்ற பாரசீக சொல்லுக்கு "துறவி" என்று பொருள். "பாபா" என்ற இந்தி சொல்லுக்கு "தந்தை" என்று பொருள்.

2. "அல்லா மாலிக்" என்பது பாபா அடிக்கடி உச்சரித்த வார்த்தை. இறைவன் ஒருவனே எஜமானன் என்பது இதன் அர்த்தம்.

3. சாயிபாபாவின் பூர்வீகம் பற்றி யாருக்கும் தெரியாது. பலர் பல விதத்தில் முயன்றும் ஒருவருக்கும் அவர் தன் பூர்வீகத்தை கூறியதில்லை.

4.பாபா தனது குருநாதராக வெங்குசா என்பவரை குறிப்பிட்டி ருக்கிறார்.

5. தன் குருநாதர் தந்ததாக ஒரு செங்கல்லை எப்போதும் தன்னுடன் வைத்திருந்தார். அதுதான் தனது உயிர் என்று அடிக்கடி கூறுவார். அந்தக்கல் உடைந்தபோது, தான் சமாதி ஆகும் காலம் வந்துவிட்டதை உணர்ந்தார்.

6.திடீரென ஒருநாள் 16 வயது பாலகனாக சீரடியில் தோன்றினார். சீரடியின் எல்லையில் இருந்த வேப்ப மரத்தடியில் தியானத்தில் இருந்த நிலையில் மக்கள் அவரைக் கண்டனர்.



7.பீமா என்ற இளைஞனின் உடலில் கிராம தேவதை "கண்டோபா" இறங்கி, இந்த இளைஞன் "உலகின் மகா யோகி" என்று வாக்கு கூறினான்.

8. சாமியாடி, பாபா அமர்ந்திருந்த வேப்பமரத்தடியில் தோண்டிப்பார்க்கக் கூறினான். அங்கே ஒரு சமாதி இருந்தது. அதைவிட ஆச்சர்யம் மூடப்பட்ட பூமிக்குள் இருந்த சமாதியில் நான்கு புறமும் நான்கு அகல் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

9.பூமித்தாயின் கருவறையில் இருந்தபடி என் குருவின் சமாதியில் 12 ஆண்டுகாலம் தவம் செய்து கொண்டிருந்தேன். என் குருவின் சமாதி

புனிதமானவை. அதை முன்புபோலவே முடிவிட்டு தினமும் சுத்தம் செய்து வணங்குங்கள் என்றார்.

10. குருஸ்தான் என்ற பெயரில் இப்போதும் இந்த சமாதியும், அதன் மேல் இருக்கும், பாபா அமர்ந்திருந்த வேப்பமரமும் வழிபடப்படுகிறது.

11. சாதாரண நாட்களில் பக்தர்கள் குருஸ்தானில் அங்கப்பிரதட்சணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

12. சிறிது நாட்களுக்குப்பின் திடீரென அங்கிருந்து மறைந்துபோனார் பாபா.

13. சில ஆண்டுகளுக்குப்பின் குசால்சந்த் என்பவரின் இல்ல மணவிழாவிற்காக, திருமண கோஷ்டியுடன் மீண்டும் சீரடிக்கு வந்தார் பாபா.

14. சீரடி கிராம தேவதை கண்டோபாவின் பூஜாரியான மகல்சாபதி அவரை முதல்முதலில் கண்டு, "ஆவோ சாயி" என்று வரவேற்றார். அதுமுதல் அவருக்கு சாயி என்ற பெயரே நிலைத்துவிட்டது.

15. சீரடியில் வசித்த பாய்ஜாபாய் என்பவர் பாபாவை தன் சகோதரனாகவே கருதி பலநாட்கள் உணவளித்து வந்தார். பாய்ஜாபாயின் மகன் தாத்யா, சாயிபாபா மகாசமாதி ஆகும் வரை கூடவே இருந்தார்.

16. பாபா சீரடியில் ஒரு பாழடைந்த மசூதியை சுத்தம் செய்து சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக அங்கேயே வாழ்ந்து வந்தார்.

17.அந்த மசூதிக்கு "துவாரகாமாயி" என்று பெயரிட்டார் பாபா. அதற்கு "அன்னையின் இருப்பிடம்" என்று பொருள்.

18. பாபாவை தரிசிக்க அத்தனை பிரபலங்களும் அங்குதான் வருவார்கள். ஒரு மன்னரின் தர்பார் மண்டபத்திற்கு இணையாக அது கருதப்பட்டது. ஆனாலும் பாபா மிக எளிமையாகவே இருந்தார்.

19.பாபா சில நேரங்களில் தனிமையாக இருப்பதற்காக, தான் உருவாக்கிய தோட்டத்திற்கு செல்வார்.

அதன் நினைவாக லெண்டித் தோட்டம் என்ற பெயரில் இப்போதும் சீரடியில் ஒரு தோட்டம் பராமரிக்கப்படுகிறது.

20. பாபா இளமையில் கட்டுடலுடன் இருந்தார். பல இளைஞர்கள் ஒன்று கூடி தூக்கமுடியாத இள வட்டக்கல்லை பாபா ஒருவரே தூக்கியிருக்கிறார்.

21. சாயி துவாரகாமாயியில் அக்னியை வளர்த்து வந்தார். "தூனி" என அதற்கு பெயரிட்டார். அணையாமல் இப்போதும் அது எரிந்து கொண்டிருக்கிறது.

22. தூனியில் இருந்து எடுத்த சாம்பலை "உதி" என்ற பிரசாதமாக பக்தர்களுக்கு அவர் வழங்கினார். பலருக்கு நெற்றியில் இட்டும் இருக்கிறார்.

23. உதியை நெய்யில் கலந்து மருந்தாகக் கொடுத்து பலரின் நோயை குணப்படுத்தியிருக்கிறார். இன்றும் பலரின் நோயை குணப்படுத்தும் அருமருந்தாக உதி பயன்படுகிறது.

24. பாபா மிக மகிழ்ச்சியாக இருக்கும் தருணங்களில் இந்த உதியைப் பற்றி பாடல்களைப் பாடுவதுண்டு.

25. இந்த உதியே இப்போதும் சீரடியில் சாயி பிரசாதமாக தரப்படுகிறது.

26. பாபா துவாரகாமாயியைச் சுற்றிலும் ஏராளமான பூச்செடிகளை

வளர்த்து வந்தார்.

27. வாமன் தாத்யா என்ற குயவரிடம் தினமும் இரண்டு சுடாத புது மண்குடங்களை வாங்கி அவற்றில் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றுவார்.

28. பாபா தண்ணீர் ஊற்றியதும் அந்த மண்குடங்கள் சில்லுகளாக உடைந்து விடும். பக்தர்கள் அதை பிரசாதமாக வீட்டிற்கு எடுத்துச் செல்வார்கள்.

29. சீரடியில் பல ஆண்டுகளாக பாபா யாசகம் பெற்றே உணவு உண்டார். அவர் தங்கள் வீட்டில் வந்து உணவு கேட்கமாட்டாரா என்று பலரும் காத்திருப்பார்கள்.

30. யாசகம் எடுத்துவந்த உணவில் இருந்து முதலில் நாய்களுக்கும், பறவைகளுக்கும் உணவளித்துவிட்டு பிறகு தான் சாப்பிடுவார்.

31. பாபா எப்போதும் ருசி பார்த்து சாப்பிடமாட்டார். ஆனாலும், ரொட்டி, போளி இரண்டும் அவருக்கு பிடிக்கும்.

32. ஒரு சில நாட்களில் உற்சாகமாக இருந்தால் அவரே கிச்சடி, புலாவ் என சமைத்து பக்தர்களுக்கு அன்புடன் பரிமாறுவார். அவர் கையால் உணவுண்ட பக்தர்கள் பேறு பெற்றவர்கள் அல்லவா?

33. ஒரு முறை சீரடியைச்சுற்றி எல்லா கிராமங்களையும் காலரா தாக்கியது. கோதுமையை அரைத்து அந்த மாவை எல்லையில் கொட்டி காலராவை விரட்டினார் பாபா.

34. ஒரு முறை மழையினால் துவாரகாமாயி முழுவதும் சகதியாகி விட்டது. அதனால் அருகில் இருந்து



சாவடியில் சென்று தங்கினார் பாபா. அதிலிருந்து ஒருநாள் சாவடி, ஒரு நாள் துவாரகாமாயி என மாறி மாறி தூங்க ஆரம்பித்தார்.

35. கோணியை விரித்து செங்கலை தலைக்கு வைத்துப் படுத்துக் கொள்வார் பாபா.

36. பிற்காலத்தில் பாபா சாவடிக்குச் செல்லும் நிகழ்ச்சி பெரிய வைபவம் போல் நடத்தப்பட்டது. அலங்கார அணிவகுப்போடு திருவிழாபோல் இன்றும் நடத்தப்படுகிறது.

37. இப்போது சாவடி பளிங்கு மாளிகை போல் பராமரிக்கப்படுகிறது.

38. வியாழக்கிழமைகளில் பாபாவின் திருவுருவப்படம் துவாரகாமாயியில் இருந்து சாவடிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறது.

39. பாபா பயன்படுத்திய பொருட்கள் இங்கு காட்சிக்கு

வைக்கப்பட்டுள்ளது.

40. சாவடியில் பாபா உறங்கிய அறையில்தான் இப்போது பூஜையும், வழிபாடும் நடைபெறுகின்றன.

41. மதபேதம் பார்க்காத மகான் பாபா. ராமநவமி, கோகுலாஷ்டமி, ரம்ஜான், முகரம் போன்ற பண்டிகைகள் அவர் முன் கொண்டாடப்பட்டன.

42. துவாரகாமாயியில் எந்த கடவுளரின் படத்தையும் அவர் வைத்திருக்கவில்லை.

43. முறையாக கல்வி பெற்றவர் இல்லை என்றாலும் பகவத் கீதையை மேற்கோள்காட்டி பண்டிதர்களையே ஆச்சர்யப்படுத்துவார்.

44. பாபா தன் பக்தர்களுக்கு விஷ்ணு சகஸ்ரநாம பாராயணத்தை பிரார்த்தனையின் வடிவமாக போதித்தார்.

45. தான் மகாசமாதி அடைவதற்கு முன்பு வஜே என்ற பக்தரை கூப்பிட்டு தினமும் இராமாயணம் படித்துக் காட்டச் சொன்னார்.

46. பாபா நீளமாக முடிவளர்த்தார். அதன்மீது துணிபோர்த்தி முடிச் சிட்டு இடது காதுக்கு அருகில் தொங்கவிட்டிருப்பார்.

47. கால்களில் பாதணிகள் அணிந்ததில்லை. முதுமையில் பக்தர்கள் வற்புறுத்தியதால் சில காலம் அணிந்து கொண்டார்.

48. சீரடியில் அவர் பாதம் படாத இடம் இல்லை. இப்போது சீரடிக்குச் செல்லும் பக்தர்கள் அனைவரும் மகானின் பாதம் பட்ட இடங்களில் நடக்கும் பாக்கியம் பெற்றவர்களாகிறார்கள்.

49. சீரடிக்கு யார் வரவேண்டும் என்றாலும், எப்பொழுது சீரடியை விட்டு புறப்படவேண்டும் என்றாலும் பாபாவின் அனுமதியுடனே நிகழும். அப்போது மட்டுமல்ல, இப்போதும்.

50. பாபாவின் அனுமதியில்லாமல் சீரடியை விட்டு புறப்பட்டவர்கள் பல துன்பங்களை சந்தித்திருக்கிறார்கள்.

51. பக்தர்கள் தங்கள் விருப்பம் போல் பாபாவை வழிபட்டார்கள். சிலர் பக்திப் பாடல்களைப் பாடினர். சிலர் இசைக் கருவிகளை இசைத்தனர். சிலர் சாமரசம் வீசினர். சிலர் பாபாவின் பாதங்களை கழுவினர். சிலர் ஆரத்தி எடுத்தனர்.

52. அனைத்தையும் அனுமதித்த பாபா தன் நெற்றியில் சந்தனம் பூச மகல்சா பதியை மட்டுமே அனுமதித்தார்.

53. இராதாகிருஷ்ணாயி என்ற பாபாவின் பரம பக்தையே பாபாவிற்கு ஆரத்தி எடுக்கும் வழக்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

54. இராதாகிருஷ்ணாயியே குரு பூர்ணிமா கொண்டாட்டத்தையும், கோகுலாஷ்டமி, சாயி நாம சப்தாகத்தையும் தொடங்கினார். அதிகாலை காக்கட ஆரத்தி தொடங்கி இரவு ஷேஜாரத்தி வரை எல்லா வழிபாடுகளையும் முறைப்படுத்தினார்.

55. துறவி போல் இருந்த பாபாவின் தோற்றத்தை இராஜயோகி போல் மாற்றியது இராதாகிருஷ்ணாயிதான்.

56. பாபு சகேப் கோபால்ராவ் பூட்டி என்ற பக்தருக்கு கட்டிடம் கட்ட அனுமதி கொடுத்த பாபா "நான் அங்கு வந்து தங்கியிருப்பேன்" என்று உறுதியும் கொடுத்தார்.

57. அந்த கட்டிடத்தின் பூஜையறையில் முரளிதர கிருஷ்ணரின் சிலையை வைப்பதற்கு பாபா



அனுமதித்தார்.

58. பூட்டி வாடா கட்டி முடித்ததும் பாபா மகாசமாதி அடைந்தார்.

59.1918 அக்டோபர் 15 விஜயதசமியில் உடல்நலமில்லாமல் இருந்த பாபா பயாஜி என்ற பக்தரின் மடியில் தலை சாய்த்துக்கொண்டு " என்னை பூட்டி வாடாவிற்கு கூட்டிச் செல்லுங்கள். அங்கு நான் அமைதியாக இருப்பேன் என்றார் கூறி சமாதியடைந்தார்.

60. பூட்டியின் மாளிகையில் முரளிதர கிருஷ்ணரின் சிலையை வைப்பதற்கு அமைக்கப்பட்ட இடத்தில் பாபாவை அடக்கம் செய்து சமாதி எழுப்பினார்கள்.அதுதான் இப்போது சமாதி மந்திராக வணங்கப்படுகிறது.

61. பண்டரிபுரத்தில் இருந்த தாஸ்கணு மகராஜின் கனவில் தோன்றிய பாபா, நான் இங்கிருந்து போகிறேன். நீ வந்து என்னை வாசனை மலர்களால் நிரப்பு என்று கூறினார்.

62. தாஸ்கணு உடனே தன் சீடர்களுடன் சீரடிவந்து பாபாவின் சமாதியின்மீது மலர்களால் போர்த்தி, பஜனை செய்தார். ஒருவகையில் சமாதி மந்திர் வழிபாட்டை தொடங்கி வைத்தது அவர்தான்.

63. பாபாவின் சமாதி மந்திரை நிர்வகிக்க நீதி மன்றம் ஒரு கமிட்டியை உருவாக்கியது. அதுதான் பல்வேறு மாற்றங் களுடன் இன்று சீரடி சாயி சமஸ் தான் என வளர்ச்சி பெற்றுள்ளது.

64. "ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு சாயிநாத் மகராஜ்" என்றுதான் சாயி பாபாவை பக்தர்கள் வணங்குகிறார்கள்.

65. சீரடியின் இதயம் சமாதி மந்திர் இங்குதான் பாபாவின் சமாதியும் அவரின் உருவச்சிலையும் உள்ளன.

66. சமாதி மந்திர் அதிகாலை 4 மணிக்கு திறக்கப்படும். 5.40 முதல் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கின்றனர்.

67. இரவு 10.30 வரை ஆலயம் திறந்திருக்கும்.

68. இராம நவமி, குரு பூர்ணிமா, விஜயதசமி, ஆகியவை இங்கு விஷேசமாக கொண்டாடப்படுகின்றன.

69. முதியோர்களும், மாற்று திறனாளிகளும் சிரமமின்றி பாபாவை தரிசிக்க விஷேசமான சிறப்பு ஏற்பாடுகளை சாயி சனஸ்தான ஏற்படுத்தியிருக்கின்றது.

70. சமாதி மந்திர் வளாகத்திலேயே

பாபாவுடன் வாழ்ந்த சாயி அடியவர்களின் சமாதியும் அமைந் திருக்கின்றன.

71. ஆலய வளாகத்திற்குள் இலவச மருத்துவமனையும் நடத்தப்படுகிறது.

72. அங்கு ரத்த தானம் அளிப்பவர்களுக்கு, பாபாவை தரிசிக்க சிறப்பு ஏற்பாடுகளும், பிரசாதமும், சான்றிதழும் தரப்படுகின்றன.

73. ஆலய வளாகத்தின் மேல் 100 நபர்களுக்கு மேல் அமர்ந்து தியானம் செய்யும் வகையில் அமைதியான தியான அரங்கம் உள்ளது.

74. பாராயண ஹாலும், புத்தக விற்பனை நிலையமும் வளாகத்தின் உள்ளேயே அமைந்திருக்கின்றன.

75. காணிக்கை செலுத்த சமாதி மந்திர் எதிரே தனியாக கவுண்டர்கள் உள்ளன.

76. பாபா பயன்படுத்திய பொருட் களை மியூசியத்தில் வைத்துள்ளார்கள்.

77. ஆலயத்துள்ளே சிவன், விநாயகர், சனி பகவானுக்கு தனிச் சன்னதிகள் உள்ளது.

78.சாய் சனஸ்தான் சார்பில் அன்ன தானத்திட்டம் செயல்படுகின்றது. மருத்துவமனைகள், கல்வி நிலையங்களும் செயல்படுகின்றன.

79. சீரடியில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் சாய் பிரசாதாலயா அமைந்துள்ளது. ஒரே நேரத்தில் 1000 பக்தர்கள் அமர்ந்து உணவு உண்ணும் வகையில் பிரம்மாண்டமாய் அமைக்கப்பட்டுள்ளது.

80. பாபாவை தரிசிக்க தினமும் சுமார் 1 லட்சம் பக்தர்கள் வருகின் றார்கள். விஷேச தினங்களில் 4 லட் சத்திற்கு மேல் பக்தர்கள் வருவதுண்டு.

81. சாதாரண நாட்களைவிட வியாழக்கிழமைகளில் பக்தர்கள் கூட்டம் இரண்டு மடங்காக இருக்கும். வியாழன், வெள்ளி ஆகிய இரண்டு நாட்களில் மட்டும் சிறப்பு பூஜை உண்டு

82. பாபா இருக்கும் போது கட்டிய கட்டிடத்தை தற்போது விரிவுபடுத்தி இருக்கிறார்கள். சன்னிதானத்திற்குள் ஒரே நேரத்தில் சுமார் 500 பேர்வரை நின்று தரிசிக்கலாம்.

83. ஆலயத்திற்குள் சாயி பஜன் நடந்து கொண்டே இருக்கும்.

84. துவாரகாமாயியில் பாபா எப்படி உட்கார்ந்திருப்பாரோ அதே இடத்தில் அதே போன்ற ஓவியம் இப்போது வைக்கப்பட்டுள்ளது.

85. துவாரகாமாயியில் ஐந்து இடங்களில் பாபாவின் பாதச்சுவடு பதிக்கப்பட்டுள்ளது.

86. துவாரகாமாயியில் பாபா கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்த கல் பாதுகாப்பாய் வைக்கப்பட்டுள்ளது.

87. குருஸ்தானத்தில் ஊதுபத்தி ஏற்றி வழிபடும் பக்தர்களுக்கு நினைத்தது நடக்கும் என பாபா அருளியுள்ளார்.

88. சாவடியை கட்டாயம் தரிசிக்க வேண்டும். சாயிபாபாவின் வழிபாடு இங்கிருந்தே துவங்கின.

89. பாபா வாழ்ந்த காலத்தில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை சாவடிக்கு வருவார். அப்போது இரண்டு ஆரத்திகள் சாவடியில் நடக்கும். மீதி இரண்டு ஆரத்திகள் துவாரகாமாயியில் நடக்கும்.

90. குஜராத்தை சேர்ந்த 18 வயது பக்தருக்கு பாபா கனவில் தரிசனம் தந்தார். அந்தக் காட்சியை அப்படியே ஓவியமாக வரைந்தார் இளைஞன். அந்த ஓவியம் சாவடியில் உள்ளது.



91. உடல்நலமில்லாமல் இருந்தபோது பாபாவிற்கு அளிக்கப்பட்ட சக்ரநாற்காலி இங்கு உள்ளது.

92. மகாசமாதி அடைந்ததும் பாபாவை நீராட்டிய படுக்கையும் இங்குள்ளது.

93. பாபா சாவடியில் உறங்கிய அறையில் தற்போது ஒரு வெள்ளி சிம்மாசனம் வைக்கப்பட்டுள்ளது.

94. பாபா உறங்கிய அறையில் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்ற சம்பிரதாயம் இப்போதும் கடைபிடிக்கப்படுகின்றது.

95. சமாதி மந்திரில் இருக்கும் பாபா சிலைக்கு தினமும் இரவில் கொசு வலை போர்த்தி, பாபா குடிப்பதற்கு தண்ணீரும் வைக்கிறார்கள்.

96. மகாராஷ்டிரா மாநிலம் அகமது நகர் மாவட்டத்தில் உள்ளது சீரடி.

97. அருகில் உள்ள சாய்நகர் இரயில் நிலையத்தில் இறங்கி, மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சீரடிக்கு ஆட்டோவில் செல்லலாம்.

98. சீரடியில் பக்தர்களின் வசதிக்கென விமானப் போக்குவரத்து தொடங்கப் பட்டுள்ளது. சீரடியில் இருந்து 13 கிலோ மீட்டர் தூரத்தில் விமான நிலையம் அமைந்துள்ளது. நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் விமானப் போக்குவரத்து நடக்கிறது.

99. சென்னையில் இருந்து சீரடிக்கு தினசரி விமான போக்குவரத்து உண்டு

100. பக்தர்களுக்கு சீரடியில் தங்கும் வசதி, தரிசன வசதி, என எல்லாவற்றையும் ஆன்லைனில் செய்து கொள்ள சீரடி சாய் சனஸ்தான் வசதி செய்துள்ளது.

101. நம்பிக்கை, பொறுமை என்பது சாயிநாதரின் பிரபலமான வாக்குதத்தமாகும்.

102. "எதைப் பிடித்தாலும் இறுக்கிப்பிடி" என்பது பாபாவின் சாஸனாம்ருதப் பொன் மொழியாகும்.

103. என் பக்தர்களிடம், என் சமாதியில் இருக்கும் எலும்புகளும் பேசும் என்பது பக்தர்களுக்கு பாபா அளித்த வாக்குறுதியாகும்.

104. சீரடியின் வாசல்படியை மிதிப்பவன் எவனோ அவனது கர்மவினை அடியோடு அகலும்.

105. நம்பிக்கையுடன் வருபவர்களை பாபா ஒருபோதும் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பியதில்லை.

ஓம் சாய்ராம்!

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!

தொடர் –27

சாய் சரவணன்

"அதி தேவதை"



பாபாவின் அடியவர்களான கேல்கர், நூல்கர் மற்றும் சில நண்பர்களும் பாபாவை காண மசூதிக்கு வந்தனர். பாபா அவர்களைக் கண்டு புன்னகை பூக்கும் வதனத்துடன் வாருங்கள் என அழைத்து தன் அருகில் அமரவைத்தார்.

1854 ல் பாபா சீரடி வந்ததிலிருந்து 1907 வரை பாபா யாரையும் எதையும் தனக்கு செய்யும்படி கூறியதே இல்லை. ஆனால் 13.07.1908 இன்று முதன் முதலாக பகவான் ஸ்ரீ சாயிநாதர் தாதாகேல்கர், மற்றும் நூல்கரிடம் "இன்று குருபூர்ணிமா என்று உங்களுக்கு தெரியாதா? பூஜா திரவியங்கள் கொண்டு உங்கள் குருவிற்கு பூஜை செய்யுங்கள்" என ஆனணயிட்டார்.

பாபாவின் ஆணையை கேட்டு கேல்கரும், நூல்கரும் பக்தர்களும் என்ன செய்வதென்று அறியாமல் பாபா குருபூஜை செய்யச் சொல்கிறார் பூஜா திரவியங்களுக்கு என்ன செய்வோம் என குழம்பினர். பாபா இவர்களின் எண்ணத்தைப் படித்து கோபமாக எங்கே அந்த "ராமகிருஷ்ணி" அவளை வரச்சொன்னேனே எனக் கூச்சலிட அங்கிருந்த அனைவரும் பயந்தனர்.

இராதாகிருஷ்ணமாயிடம் பாபாவின் அழைப்பைக் கூற சென்றவன் அதே சமயம் ஒரு கூடையோடு மசூதிக்கு வந்தான். எல்லாரும் கூடையில் என்ன கொண்டுவருகிறான் என்று பார்க்க ஆவல் கொண்டனர்.

பாபாவோ கணநேரத்தில் அமைதியாகி துனி அருகில் வந்து

அமர்ந்தார். (அக்கூடையில் நம் இராதாகிருஷ்ணமாயி பாபாவின் குரு பூஜைக்கு தேவையான சகல விதமான மங்களபொருட்களை வைத்து அழைக்க வந்தவனிடம் பிரேமையோடு அனுப்பியிருந்தாள்)

பாபாவின் முன் வைக்கப்பட்ட கூடையில் இருந்த பொருட்களை எடுத்துப் பார்த்தனர்.அதில் பாபாவிற்கு பிடித்த சில்லீம் புகைகுழாய், திராட்சை பழங்கள், மேலும் பாபாவிற்கு குருபூஜை செய்வதற்குண்டான பூஜை பொருட்கள் தாராளமாக இருந்ததைக் கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டனர்.

தாதாகேல்கரின் மனபாரம் இப்போதுதான் இறங்கியது. கூடையை எடுத்து வந்தவனிடம் கேல்கர், எங்கே இராதாகிருஷ்ணமாயி வரவில்லையா? எனக் கேட்டார், பாபாவோ "இனி அவள் எதற்கு? வரவேண்டாம். அவள் அங்கேயே இருக்கட்டும்" என்றார். எல்லாரும் இராதா கிருஷ்ணமாயி அனுப்பி வைத்த பூஜை பொருட்களை கண்டு ஆச்சரியம் கொண்டார்களே ஒழிய ஆயியின் குருபக்தியை எவரும் சிந்திக்கவே இல்லை.

பிறகென்ன தாதா கேல்கர் மற்றும் நூல்கர் எல்லார் முன்னிலையிலும் சாயிநாதருக்கு பாதபூஜை, சந்தனமிடுதல் என முடித்து பூமாலையை பாபாவின் கழுத்தில் இட்டு தூபம், தீபம் காட்டி திராட்சையை நெய்வேத்யம் செய்து ஆரத்தி எடுத்து வழிபட்டனர். (ஆரத்தி என்றால் பாட்டு பாடி அல்ல, ஆரம்ப கட்டத்தில் எந்த பாட்டும் பாடப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.)

பூஜை நிறைவுற்ற போது பாபா ஆயியால் அனுப்பி வைக்கப்பட்ட சில்லீம் புகை குழாயை ஏற்றுக் கொண்டார். பாபாவிற்கு குருபூஜை நடைபெறும் தருணத்தில் ஆயி தூரத்தில் இருந்தே எல்லாவற்றையும் கண்டு இரசிப்பாள். பாபாவும் தன் மதிய உச்சிஷ்ட பிரசாதத்தை ஒரு நபரிடம் அளித்து ஆயிக்கு அனுப்பி வைப்பார்.

பாபாவின் பிரசாதத்திற்காகவே காத்திருக்கும் ஆயி பிரசாதத்தை பிரேமையுடன் உண்பாள். எனவே ஷீரடியில் "குருபூர்ணிமா" விழா முதன்முதலாக 13.07.1908 ஆஷாதா ஸரவணமாதம், திங்கள், சுக்லபட்ஷ திதி அன்று தொடங்கியது.

பாபாவின் சங்கல்பமும் ஆயியின் சங்கல்பமும் நிறைவேறியது. பிறகு 1909ம் ஆண்டில் இருந்து தான் குருபூர்ணிமா விழா பிரபலம் ஆனது. 1909ல் நடந்த குருபூர்ணிமா விழாவில் நடந்த நிகழ்வை நூல்கர் அவர்கள் நானாசாஹேப்பிற்கு கடிதம் மூலம் அனுப்பிவைத்தார்.

அந்த நிகழ்வில் நூல்கரும், கேல்கரும் பாபாவின் குருபூஜை செய்து விட்டு பாபாவிற்கு தட்சணையும் வழங்கிய போது பாபா அதை ஏற்க மறுத்து விட்டார். மேலும் திருமதி கேல்கரையும், இராதாகிருஷ்ணமாயியையும் அழைத்தார் பாபா. திருமதி கேல்கர் வந்தார், ஆயி வரவில்லை.

மாறாக 1908ல் நடந்தது போல் 1909 லும் பூஜை பொருட்களை அனுப்பி வைத்தாள் ஆயி. அதை பாபா ஏற்றுக கொண்டார். அன்றிலிருந்து பாபாவிற்கு எந்த பூஜை என்றாலும் இராதாகிருஷ்ணமாயிடம் இருந்தே எல்லா பொருட்களும் வந்தன. இதில் ஆச்சரியம் என்னவெனில் ஸ்ரீ ராதாகிருஷ்ணமாயிக்கு குரு உபதேசம் நடந்தது 10.07.1908 வெள்ளி கிழமை.

குருபூர்ணிமா தொடக்க விழாவோ 13.07.1908 திங்கள் கிழமை.

இது சாயிநாதரின் திருவிளையாடல் அல்லவா? பாபாவின் "குருபூர்ணிமா" விழா தொடங்கி வைத்ததன் பெருமை தாதாகேல்கரையும், நூல்கரையும், சேர்ந்தது. ஆனால் அன்னையின் பிரேமையும், அன்பும் எல்லாருடைய பார்வையிலிருந்தும் மறைந்து போனது. பாபா அழைத்து இராதாகிருஷ்ணமாயி ஏன் வரவில்லை என கேள்வி எழுந்தால், ஆயி வராததை பற்றி பாபாவின் பக்தர்கள் கவலை படலாம்.



ஆனால், சாயிநாதர் கவலைப்படவில்லை, காரணம் ஆயியின் முழு பிரேமையும் குருபக்தியும் ஆயியால் அனுப்பப்பட்ட பூஜா திரவியங்களோடு இரண்டறக் கலந்து இருந்தது. ஆயி வரவில்லை. பூஜை பொருட்கள் பாபாவிற்கு சமர்ப்பணம் ஆனது. பாபா எப்போதும் பக்தர்களால் வழங்கப்படும் புற வஸ்துகளை விட பக்தர்களின் மனதில் உள்ள பக்தி எனும் பிரேமையை மட்டுமே பெரிதும் விரும்புகிறார். இதுவே சாயிநாதரின் சங்கல்பமும் இராதாகிருஷ்ணமாயியின் சங்கல்பமும்.

நம் சாயிநாதர் இராதாகிருஷ்ண மாயியை "ஆயி" என்றே அழைப்பார். வாமன்ராவ் போன்ற பாபாவின் பக்தர்கள் "மாயி" என்றே அழைப்பார்கள். மராட்டி மொழியில் இராதாகிருஷ்ணமாயியை குறித்த இரு சொற்கள், ஒன்று மாயி, மற்றும் ஆயி. "மாயீ" என்றால் சாதாரண பெண்மணிகளைத் தாயாக பாவித்து அழைப்பது. "ஆயி" என்றால் தாய், பெற்றெடுத்த தாய். பெறாமல் பெற்றெடுத்து இந்த உலகத்திற்கே தாயாக விளங்கும் திறன் படைத்தவர்களையும் "ஆயி" என்றே அழைக்கலாம்.

ஆதலால் தான் பாபா "ஆயி" என்றே குறிப்பிட்டு அழைத்து வந்தார். அன்னை சாரதா தேவியின் சிறு நிகழ்வை காணலாம். சாரதாதேவியை முதல் முறையாக தரிசித்த சீடர்கள் தன் தாய், தந்தையரை சாரதேவியின் திருமுகத்தில் தரிசித்து விழுந்து வணங்கி உள்ளனர்.

அவர்களில் ஒரு சீடன் இதனை வியந்து அன்னையிடமே கேட்க, சாரதாதேவி புன்னகையோடு கூறினாள் "இதில் என்ன சந்தேகம் குழந்தாய்! நான் உனது தாய் உன்னைப் பெற்றெடுத்த தாயே தான்!" என்றாள். சாரதாதேவியைப் போலவே

இராதாகிருஷ்ணமாயியும் பாபாவின் அங்கித குழந்தைகளுக்கு சிறந்த தாயாக விளங்கி அவர்களை ஆன்மீக பாதையில் நடத்திச் சென்ற நிகழ்வுகள் ஏராளம். அந்த நிகழ்வுகளில் ஒரு நிகழ்வை இங்கே தருகிறோம்.

வசதிகள் நிறைந்து இருந்தாலோ, ஒன்றுமே இல்லாவிட்டாலோ அவரது உள்ளம் சாயியிடம் லயித்திருப்பதால், அவர் மகிழ்வும் அடைவதில்லை, நொந்தும் போவதில்லை. இது சமுத்திரம் போல இருக்கும். இராதா கிருஷ்ணமாயி ஷீரடியில் என்ன விதமான நிகழ்வோ, அவமானமோ எது ஏற்படினும் ஒரே மாதிரியான ஸ்திரதன்மையுடன் இன்முகத்தோடு காணப்பட்டாள்.

ஆனால் சாயிநாதரின் சேவைதனில் குழப்பத்தையோ, தடைகளையோ, தவறுகளையோ, எவராவது செய்தாலும், செய்ய நினைத்தாலும் சாயிநாதரை போல ருத்ர தாண்டவம் ஆடுவாள் ஆயி. சாயிநாதர் ருணானுபந்தத்தின் அடிப்படையில் பல பக்தர்களை ஷீரடிக்கு இழுப்பார்.

அதில் குறிப்பிட்ட பல பேரை இராதாகிருஷ்ணமாயிடம் அனுப்பு வார். பாபாவின் குறிப்பை மனதாே லயே அறியும் ஆயி பாபாவால் அனுப்பப் பட்ட பக்தர்களுக்கு பல விஷயங்களை கற்றுக் கொடுத்து சாயியின் சேவையில் முழுமனதோடு ஈடுபடும்படியான மனமாற்றத்தை ஆயி விதைப்பாள்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

தொடர் –4

சுந்தர்சாய்


திருவருள் தேடி

ஓம் சாய்ராம். அனைவருக்கும் சுந்தர்சாயின் அன்பு வணக்கம். சென்ற இதழில் விசா பாலாஜியின் ஆசீர்வாதத்தினால் மும்பையில் இருந்து நேர்காணலுக்கு அழைப்பு வந்ததிலிருந்து இந்த முறையாவது நல்லபடியாக வேலை கிடைக்குமா? அல்லது இதற்கும் ஏதாவது தடை வருமா? என்ற குழப்பம் ஏற்பட்டது.

நேர்காணலில், ஏன் இவ்வளவு நாளாக வேலைக்குப் போகவில்லை என்ற கேள்வி வந்தால் என்ன செய்வது என்று பலவாறாக குழம்பித் தவித்த பின் ஒருவாறாக மனதைத் தேற்றிக்கொண்டு, "சர்வம் சாயிநாதார்ப்பணம்" என சத்யசாயி பாதங்களில் எனது பயம், கவலை, சந்தேகம் அனைத்தையும் சரணாகதி செய்துவிட்டு ஒரே மனதுடன் நேர்காணலுக்கு மும்பை சென்றேன்.

மும்பை அலுவலகம் சென்ற என்னை, 5, 6 அறைகளில் உள்ள அதிகாரிகள் வரிசையாக அழைத்து நேர்காணல் செய்தனர். அனைத்து உயர் அதிகாரிகளும் என்னை நடத்திய விதத்தில் இருந்து பாபாவின் துணை எனக்கு முழுமையாக இருந்ததை நன்கு உணர்ந்தேன்.

ஆம்! என்னை நேர்காணல் செய்த அதிகாரிகள் அனைவரும் உயர்பதவியில் இருப்பவர்கள். அனைவரும் என்னை மிகவும் உற்சாகமாக வரவேற்று, என் முந்தைய வேலையில் இருந்த



அனுபவங்கள், பிரச்சனைகள், அதை எப்படி எதிர் கொண்டேன் என்பதை எல்லாம் சாந்தமாக விசாரித்து அறிந்து கொண்டனர். பின்பு உணவு இடைவேளைக்குப் பின் சந்திக்கும்படி கூறி அனுப்பினர்.

அதுவரை நடந்தவை எனக்கு மிகுந்த நம்பிக்கையை தோற்றுவித்தது. எல்லாம் பாபாவின் விருப்பம் என எண்ணி எனது மதிய உணவை முடித்துக்கொண்டு, மீண்டும் ரீஜினல் டைரக்டர் அழைப்பை பெற்று அவரது அறையினுள் நுழைந்தேன். அவர் என்னை அன்புடன் வரவேற்று, நான் வேலைக்குத் தேர்வு பெற்றதை

அறிவித்தார். மேலும் அவர்களது கம்பெனியில், எனக்கு "இண்டர்நேசனல் மார்க்கெட்டிங்" மேனேஜர் பதவி வழங்கப்பட்டிருக்கிறது என்றும் ரஷ்யாவில் இருக்கும் அவர்களது மருந்து தயாரிக்கும் தொழிற் சாலைக்கு என்னை பதவியேற்கும்படி கூறி சம்பளம், மற்றும் அங்குள்ள சவால்கள் என்ன என்பதையும் எனக்கு விரிவாக விளக்கினார்கள்.

முதலாவதாக அங்கு நிலவும் மைனஸ் டெம்பரேச்சர், இரண்டாவதாக மொழிப்பிரச்சனை. ரஷ்யன் மொழி மட்டுமே பேச வேண்டும். அங்கு ஆங்கிலம் யாருக்கும் தெரியாது. மூன்றாவதாக முக்கியமாக அரசாங்க முன் அனுமதியின்றி யாரையும் சந்திக்க முடியாதென்றும், எழுத்து மூலம் முன் அனுமதி பெற்றே மருத்துவர்கள், மருத்துவ அதிகாரிகளை சந்திக்க வேண்டும் என்பதை விளக்கிய போது எனக்கு மீண்டும் ஒரு கவலை தொற்றிக் கொண்டது.

இந்தியாவில் உள்ளதைப்போன்று நமக்கு தேவையான சம்பந்தப்பட்ட எந்த ஒரு தகவல் தொகுப்பும் கிடையாது. நாம் தான் விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும். அதுவும் அரசாங்க அனுமதியுடன். புரியாத, தெரியாத மொழியில். மேலும் அங்கு உணவு, வாழ்க்கை முறை அனைத்தும் முற்றிலும் மாறுபட்டது. எனவே இந்த சவால்களை எல்லாம் நான் மட்டும் தனியாகவே சமாளிக்க வேண்டுமே!

வயதான என் அம்மாவையும், என் குடும்பத்தையும்,ஹைதராபாத்தில் வாங்கிய என் புது குடியிருப்பில் விட்டுவிட்டு செல்ல வேண்டியிருந்தது. குறைந்தபட்சம் சுமார் ஒன்னரை ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே கம்பெனி செலவில் விடுமுறையில் வந்து செல்லலாம். என் மகனுக்கு அப்போது ஆறு வயது. இரண்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான்.

நான் வீட்டாரிடம் கலந்து பேசி ஒரு வாரத்தில் முடிவை தெரிவிப்பதாக கூறிவிட்டு ஹைதராபாத் திரும்பினேன். ஓரிரு நாட்களில் அவர்களது "ஆப்பர் லெட்டர்" வந்தது. வயதான அம்மா, மனைவி, சிறுவயது பையன் அனைவரையும் ஹைதராபாத்தில் தனியாக விட்டுவிட்டு, முற்றிலும் பழக்கமில்லாத நாட்டிற்கு வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஒரு பெரும் சவாலாகவே என் முன் உருவெடுத்தது.

பல குழப்பங்களுக்குப்பின் மனம் ஒரு தெளிவான விடையை பற்றிக் கொண்டது. நமக்கு பாபாவின் பரிபூரண அருளால்தான் இந்த வேலை கிடைத்திருக்கிறது. நாம் இந்த வேலையை ஒத்துக்கொள்வோம். அந்த வேலையில் உள்ள சவால்களையும் நிச்சயமாக அவரே சமாளிக்க கற்றுக்கொடுப்பார் என்ற திடமான நம்பிக்கை ஏற்பட்டது. அதன்பிறகு வெளி நாட்டுக்குச் செல்ல எனது சம்மதத்தை எனது கம்பெனிக்குத் தெரிவித்தேன்.

அவர்களும் ஒரு வாரம் கழித்து வெளிநாடு செல்ல வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்துவிட்டு மும்பையில் நடைபெறும் "அறிமுக வகுப்பில்" கலந்து கொள்ள அழைத்தார்கள். அங்கும் சென்று கலந்துகொண்டேன்.

கொஞ்சம் கொஞ்சமாக வெளிநாடு செல்ல வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த போது நிதி நிலமையில்

சற்று தேக்கம் ஏற்பட்டது. திடீர் செலவுகளால் கொஞ்சம் திண்டாடிய சமயம்.

இவ்வளவு ஏற்பாடுகளை செய்யும் பாபா கைவிட்டு விடுவாரா என்ன? நான் எதிர்பார்க்காத, எனக்கு வரவேண்டிய பழைய செட்டில்மெண்ட் தொகை ரூ. 27000 எதிர்பாராத விதத்தில் என் கைக்கு வந்து சேர்ந்தது. பொருளாதார சிக்கல்களும் ஓரளவு சரியானது. எல்லாம் அவன் செயல் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்.

ஜெய் சாய்ராம் என்று மனதிற்குள் வணங்கிவிட்டு, என் அக்காவிடம் பெரிய சூட்கேஸ் ஒன்றை ஓசி வாங்கி என் துணி மணிகளை நிரப்பியபோது தான், வெளிநாடு செல்கிறோம் இரண்டு மூன்று புது ட்ரெஸ் இருந்தால் நான்றாக இருக்குமே என்று தோன்ற, அப்பொழுதுதான் ஹைதராபாத்தில் புதிதாக " ஸ்டாப்பர்ஸ் ஷாப்" என்ற புதிய ஷாப்பிங் மால் ஒன்று தொடங்கி பிரமாண்டமாக, விற்பனை விளம்பரங்களுடன் அனைவரையும் ஈர்த்தது.

நானும் குடும்பத்துடன் சென்று அங்கு துணி வாங்கிக்கொண்டிருந்தேன். எனது மகன் ஆறு வயது அர்ஜூன் அந்த சமயத்தில் அங்கு வைக்கப்பட்டிருந்த " லக்கி டிப்" என்ற பெட்டியைப் பார்த்து ஆவலுடன் என்னை அழைத்து நாமும் அதில் பங்கு பெறலாம் என்று அழைத்தான். எனக்கு அதில் ஈடுபாடில்லாத போதும் குழந்தையின் விருப்பத்திற்காக அதற்குண்டான கூப்பனை பூர்த்தி செய்து பெட்டியில் சேர்த்துவிட்டு,



வீடு வந்து சேர்ந்தோம்.

நம் வாழ்வில் இறை சக்தி வேலை செய்ய ஆரம்பித்து விட்டால் (முதலில் அதை நாம் முழுமையாக வேலை செய்ய விட்டால்) நடப்பது யாவும் நன்மைக்கே! என்பதை உணர்த்தும்.

அன்று நடந்ததை இன்று நினைக்கும் போதும் என் கண்களில் நீர் துளிகள் பனிக்கும். அந்த அபார கருணா விலாசத்தை அடுத்த இதழில் அறிந்து மகிழ்வோம்!

சகலம் சத்குரு க்ருபா!

குரு வாழ்க! குருவே துணை!

– தொடரும்...

ஓம் சாய்ராம்
ஸ்ரீ பச்சநாச்சி துணை.

ஸ்ரீ சாய்கிருபா டூர்ஸ் & டிராவல்ஸ்

சீரடி - ஜோதிலிங்க யாத்திரை. சாமான்யர்களுக்காக, குறைந்த கட்டணம். மனநிறைவான தரிசனம்.

புறப்படும் நாள்: 3.12.23 நாட்கள்: 6 கட்டணம்: 5500/

பார்க்கும் இடங்கள்: பீமாசங்கர் ஜோதிலிங்கம், நாசிக் திரியகம் பேஸ்வரர், கோதாவரி திரிவேணி சங்கமம், பஞ்சவடி, சீதா குகை, காலாராம்,கபாலீஸ்வரர் ஆலயம். அவுரங்காபாத் கிரிஸ்னேஸ்வர், எல்லோரா, ஆஞ்சநேயர் கோவில்,

சீரடி சாய்பாபா மந்திர், சனி சிங்கனாபூர், ஸ்ரீ தத்தாத்ரேயர் ஆலயம்

ரூ.2500/ செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

குஜராத் யாத்திரை

புறப்படும் நாள்: 31.01.24. நாட்கள்: 8 கட்டணம்: 7500/

பார்க்கும் இடங்கள்: கொடியர் கன்னி கோவில், நிஸ்கலங் மகாதேவ் கடல் கோவில், சோம்நாத் ஜோதி லிங்கம், நாகநாத் ஜோதி லிங்கம், துவாரகா கிருஷ்ணன் கோவில், ருக்மணி துவாரகா, பேட் துவாரகா, கோபிசந்த் முன்பதிவு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ரூ.2500/ செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

காசி ராமேஸ்வரம் யாத்திரை

புறப்படும் நாள்: 23.02.24. நாட்கள்: 10 கட்டணம்: 8500/

பார்க்கும் இடங்கள்: கல்கத்தா காளி கோவில், விவேகானந்தர் இல்லம், விக்டோரியா மஹால், ஹவுரா பாலம், கயா முன்னோர்க்கு தர்பணம் கொடுத்தல், புத்தர் தவமிருந்த இடம், காசி கங்கை நீராடல், காசி விஸ்வநாதர்,விசாலாட்சி, காலபைரவர், அன்னபூரணி, அனுமன் மந்திர், சோயி மந்திர், துர்கா மந்திர், துளசி மந்திர், மணி மந்திர்,பிர்லா மந்திர். இராமேஸ்வரம் 22 தீர்த்தம் நீராடல், சுவாமி தரிசனம்.

அக்டோபர் முதல் வாரத்தில் ரயில் முன்பதிவு தொடங்குகிறது. ரூ.3500/ செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும். புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.

குறிப்பு: இரயில், பேரூந்து கட்டணம், குரூப்பாக தங்குமிடம், உணவு யாத்திரை ஏற்பாட்டாளர்களைச் சார்ந்தது. இரயிலில் உணவு, ஆட்டோ, படகு, பூஜை, தர்ப்பணச் செலவுகள் பயணிகளைச் சார்ந்தது.

தொடர்புக்கு:

சாய் கோபால், விருகை, சென்னை – 92. / 9962763311, 7299745499.

சி. அமுதா, ராணி அண்ணாநகர், அரும்பாக்கம். 9790822629.

ஜி பே நம்பர்: 9962763311.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் ஸ்ரீ பிரம்ம யோகி கங்காதர சுவாமிகளின் வாழ்க்கை வரலாறை அறிந்து கொண்டு சுவாமிகளின் சீவ பீட ஆலயத்தை தரிசிப்போம் வாருங்கள்.

ஸ்ரீ பிரம்ம யோகி கங்காதர சுவாமி



ஆந்திர மாநிலம் புத்தூர், நாராயண வனம் அருகில் உள்ள கீழ்கரை என்ற கிராமத்தில் 1913 ம் வருடம் தை மாதம் பௌர்ணமி நாளில் பூச நட்சத்திரத்தில் சற்குரு வேலாயுதசாமி அன்னை முத்தம்மாள் ஆகியோருக்கு ஸ்ரீ கங்காதர சுவாமிகள் மகனாக அவதரித்தார்கள்.

சென்னை வியாசர்பாடியில் வளர்ந்து பள்ளிப்படிப்பை முடித்தார்கள். சுவாமிகளின் தந்தையே சிறந்த பிரம்ம ஞானி என்பதால் தந்தையாரிடமே யோக மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் முறையாகப் பயின்றார். ஆன்மீகக் கல்வியை மாணவர்களுக்கு தீட்சை அளிக்கும் அளவிற்கு சிறப்பாக கற்றுத் தேர்ந்தமையால் சுவாமிகளுக்கு, "காயத்திரி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

தனது சக மாணவருடன் திருமலை காட்டிற்குள் சில நாட்கள் தவமிருக்கலாம் என்று முடிவு செய்து சென்றவர். தனது தவ ஆற்றலால் 7 ஆண்டுகள் கடும் தவம் இயற்றினார் அதன் பலனாக, சுவாமிகளுக்கு அன்னை தேவி காட்சிய ளித்து, உங்கள் தவம் நிறைவு பெற்றது. நீங்கள் புறப்படலாம் என்ற ஆசியுடன் அசரீரி கேட்டது.

தேவியின் தரிசனத்திற்குப் பிறகு, சுவாமிகளுக்கு பல சித்திகள் கிடைக்கப் பெற்றது. மக்களின் குறைகளுக்கு

ஏற்றவாறு, வெறுங் கையில் விபூதி, கற்கண்டு, மஞ்சள், பூ முதலியவற்றை வரவழைத்துக் கொடுப்பார். நோய்களில் வாடிய பக்தர்களுக்கு விபூதி வரவழைத்து அதன் மூலம் அவர்களின் நோய்களை தீர்த்து வைப்பார்.

நமது சுவாமிகளின் அற்புதங்களைக் கண்ட அவரது தந்தையும் குருவுமான வேலாயுதம் சுவாமிகள், இல்லறத்தின் மேன்மையினை எடுத்துக்கூறி, இல்லறத்தில் இருந்துகொண்டே ஆன்மீக பணியினை செய்யலாம் என்று நம் சுவாமிகளுக்கு திருப்பூர் அம்மாள் என்ற திரிபுர சுந்தரி என்ற பெண்ணை திருமணம் செய்து வைத்தார். சுவாமிகளுக்கு, திருவேங்கடம், ராஜேஸ்வரி என்று இரு குழந்தைகள் பிறந்தனர்.

சுவாமிகள் தன்னுடைய ஆரம்ப கால ஆன்மீகப் பயணத்தில் ஏராளமான மகான்களை தரிசித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளார். ஆந்தை சாமி என்ற மகான் நம் சுவாமிகளின் மீது அதிக பிரியமாக இருந்துள்ளார்.

கங்காதர சுவாமிகள் தன்னுடைய ஆத்ம சிஷ்யையாக இருந்த குமாரி அம்மாள் அவர்களின் குடும்பத்திற்கு அநேக நன்மைகளை செய்துள்ளார். குருவின் மீதுள்ள அதீத பக்தியினால் குமாரி அம்மையார் திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சாரியாக தீட்சை பெற்று குருவிற்கு சேவை செய்து ஆத்ம சீடராகத் திகழ்ந்தார். இக்கட்டுரையின் தகவல்கள் அனைத்தும் குமாரி அம்மையார் அவர்கள் அளித்ததே!

ஒருமுறை சுவாமிகள் அவரது சீடர்களுடன் புகைவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, அவர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு குழந்தை பசியால் அழுது துவண்டு



சோர்ந்து போனது. அதைக்கண்ட சீடர்கள் குழந்தையின் தாயிடம் பால்புட்டியை வாங்கிவந்து சுவாமிகளிடம் கொடுத்து விபரம் கூற, சுவாமிகள் பால்புட்டியை சிறிது நேரம் தன் கையில் மறைத்து வைத்திருந்துவிட்டு கொடுத்தார்கள். என்ன ஆச்சர்யம். புட்டி நிறைய பால் நிறைந்திருந்தது. குழந்தையும் பாலை உண்டு பசியாறி அழுகையை நிறுத்தியது. சுவாமிகளின் சித்து வேலையைக் கண்ட பயணிகள் சுவாமிகளை வணங்கிச் சென்றனர்.

சுவாமிகள் அடிக்கடி பலநாட்கள் கடுமையாக தியானத்தில் ஆழ்ந்துவிடுவார். 48 நாட்கள் ஆனாலும் எதுவும் உண்ண மாட்டார். தவத்தில் இருந்து எழுந்தவுடன் பால்சாதம் மட்டும் சாப்பிடுவார்.

ஒருமுறை தனது சிஷ்யை குமாரி அவர்களின் வீட்டில் ஒரு நாகம் புகுந்துவிட்டது. இதைக் கேள்விப்பட்ட சுவாமிகள் உடனடியாக வந்து நாகத்தை பிடித்து ஒரு டப்பாவில் அடைத்துச் சென்றார்கள். ஆஸ்ரமத்திற்கு வந்து டப்பாவைத் திறக்க, அதற்குள் நாகத்திற்குப் பதில் ஒரு திருமாங்கல்யக் கயிறு இருந்தது.

சுவாமிகள் பெரம்பூர் ரெயில் பெட்டி தொழிற்சாலையில் பணியாற்றிய போது, வாரம் தோறும் பூஜைகள் நடைபெறும். வாரம் ஒரு பணியாளர் செலவுகளை ஏற்றுக்கொண்டு பூஜை செய்வார்கள். சுவாமிகளின் முறை வந்தபோது சுவாமிகளிடம் சொல்லாமல் பூஜைக்கு ஏற்பாடு செய்தை விட்டாரகள்.

இறுதியில் பக்தர்களுக்கு பிரசாதம் தர வேண்டுமே என்ன செய்வது என்று திகைத்தபோது, சுவாமிகளே ஒரு காலி பாத்திரத்தை எடுத்துவரும்படி கூறி அந்தப் பாத்திரத்தின் மேல் தனது துண்டைப்போட்டு மூடி, அதன்மேல் தன் கைகளால் ஏதோ சில சைகைகளைச் செய்து விட்டு துண்டை எடுத்தார். காலிப்பாத்திரம் முழுவதும் பூந்தி நிறைந்திருந்தது. பக்தர்களும் ஆனந்தமாக பூந்தி பிரசாதத்தைப் பெற்றுச் சென்றனர்.

ஒருநாள் ஆஸ்ரமத்தில் ஒரு குடிகாரன் ஒருவன் முழுக்கக் குடித்துவிட்டு உள்ளே நுழையப்பார்த்தான். அப்பொழுது எங்கிருந்தோ வந்த நாகம் ஒன்று அவனை வழிமறித்து நின்றது. அவனால் ஆஸ்ரமத்திற்குள் செல்ல முடியவில்லை. உடனே சுவாமிகளிடம் இனிமேல் குடித்துவிட்டு ஆஸ்ரமத்திற்கு வரமாட்டேன் என்று மன்னிப்புக்கேட்டுக்கொண்டான். உடனே சுவாமிகள் நாகத்தைப் பார்த்து வழி விடு என்றரார். உடனே நாகம் அவ்விடத்தை விட்டு மறைந்தது.

கடுமையான வெயில் காலத்தில், ஒரு பெரிய அண்டாவில் தண்ணீர் நிரப்பச்சொன்னார் சுவாமிகள். தண்ணீர் நிரப்பியதும் அதை தனது கைகளால் அள்ளி அள்ளி அனைத்து பக்தர்களுக்கும் தர, அதைக்குடித்த பக்தர்கள் ஆரஞ்சு பழச்சாறாக இருந்ததை உணர்ந்தனர்.

ஒரு பக்தரின் இல்லத்தில் நடந்த



பூஜையில் ஒரு தட்டில் உதிரிப்பூக்களை எடுத்துவரக் கூறினார் சுவாமிகள். பூக்கள் நிரமபிய தட்டு வந்ததும் அதற்குள் தன் கைகளை விட்டு, லிங்கம், விநாயகர், போன்ற விக்கிரகங்களை எடுத்துக்கொடுத்தார். அவைகள் இன்றும் சுவாமிகளின் ஆத்ம சீடரான குமாரி அம்மையாரின் இல்லத்தில் பூஜிக்கப்படுகின்றன.

ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் காட்சி தந்தும், சுண்ணாம்புக்கட்டியை திருநீறாக மாற்றியும், கேழ்வரகு களியை கற்கண்டாக மாற்றியும், பல அற்புதங்களை செய்த மகான் ஸ்ரீ கங்காதர சுவாமிகள் ஆவார்.

02.02.2000 அன்று புதன்கிழமை தைமாதம் சுவாமியின் சிஷ்யை குமாரி அம்மையார் இல்லத்தில் சமாதி நிலையை அடைந்தார். 03.02.2000 வியாழக்கிழமை ஆந்திர மாநிலம் வெற்றிலைதடுக்கு என்னும்

கிராமத்தில் சமாதி செய்யப்பட்டு ஆலயம் எழுப்பப்பட்டது.

சுவாமிகள் தனது கடைசி 14 ஆண்டுகள் குமாரி அம்மையார் இல்லத்தில் ஆஸ்ரமம் அமைத்து வாழ்ந்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமிகள் வாழ்ந்த ஆஸ்ரம முகவரி:

ஸ்ரீ கங்காதர சுவாமிகள் மடம்,
2/63, விநாயகபுரம் விரிவாக்கம்,
வேப்பம்பட்டு ரயில் நிலையம் அருகில்,
சென்னை 24.

தொடர்புக்கு, ஸ்ரீ குமாரி அம்மையார்
தொலைபேசி: 8056437849.

சீவசமாதி முகவரி:

ஸ்ரீ கங்காதர சுவாமிகள் சீவ சமாதி,
ஸ்ரீ வேலாயுதம் சுவாமிகள் சீவ சமாதி
வெத்தலைதடுக்கு, நகரி, ஆந்திரா.

பேரூந்து மார்க்கம்: சென்னை மாதவரம் பேரூந்து நிலையத்தில் இருந்து ஊத்துக்கோட்டை வழியாக செல்லும் திருப்பதி செல்லும் பேரூந்தில் ஏறி நாராயணவனம் பைபாஸில் இறங்கி ஷேர் ஆட்டோவில் ஆலயத்திற்கு செல்லலாம்.

இரயில் மார்க்கம்: சென்னை சென்ரல்



திருப்பதி

இறங்குமிடம்: புத்தூர் ரயில் நிலையம்

இங்கிருந்து ஷேர் ஆட்டோவில் ஆலயம் செல்லலாம்.

சித்தர்களின் சீவ பீடத்தை வணங்குவோம்!

வாழ்க்கையின் கர்ம வினையைக் குறைப்போம்!

- (தொடரும்)...

தெய்வீகம்!

இறைவனின் நாமம் பாடுபவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் அமைதியைத் தருகிறது. எப்போதும் இறைவனின் பஜனைகளை மட்டும் கேட்கக் கொண்டிருக்கக் கூடாது. பங்கேற்கவும் வேண்டும். பாடுவதற்கும் பஜனை செய்வதற்கும் கூச்சப்படக் கூடாது. உங்களுக்குத் தெரிந்ததைப் பாட வேண்டும். இது உங்களின் திறமையை வெளிப்படுத்துவது அல்ல,

மாறாக 'ஒற்றுமையையும் தூய்மையையும்' கொண்டு வரும். புனிதமான வழிபாட்டுச் செயலாகும். இது இறுதியில் உங்களைத் 'தெய்வீகத்திற்கு' வழிவகுக்கும். ஒன்றாகப் பாடுவது ஒற்றுமையைக் கொண்டுவருகிறது, தெய்வீக நாமம் ஒருவரின் எண்ணங்களையும் உணர்வுகளையும் தூய்மைப்படுத்துகிறது, மேலும் இவை அனைத்தும் நம்மில் மறைந்திருக்கும் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்துகின்றது.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திரு.திருமலைக்குமார். கோவை. ரூ.2000.
ஸ்ரீமதி.பத்மா சந்திரன்.கொளத்தூர். ரூ.1000.
திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK. ரூ.1000.
திருமதி. மாதங்கி பாலாஜி. சென்னை. ரூ.516.
திருமதி.சுகன்யா மகேஷ்பிரபு, சென்னை. ரூ.500
திரு.மு.திருக்கைவேல். ஒசூர்.ரூ.500.
திருமதி. சுமதி.வாழ்க வளமுடன். கொளத்தூர். ரூ.500.
திரு.கேஸ்வர்.ஈரோடு. ரூ.500.
திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500.
திரு. முரளி சாய்ராம். திருநின்றவூர். ரூ.500.

திருமதி.சரஸ்வதி கமலக்கண்ணன். வேப்பம்பட்டு. ரூ.500.
திருமதி. உமா மகேஸ்வரி. ஜோதிடர். அயனாவரம்.ரூ.500
திருமதி. நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.500
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500
திரு.நீலநாராயணன். திருப்பனந்தாள். ரூ. 500.
திரு.ரமேஷ் பாப். சென்னை.ரூ.500
திரு.பி.இராமச்சந்திரன். வில்லிவாக்கம். ரூ.500.
திரு.ரமேஷ் செல்லதுரை. சென்னை. ரூ.500
திருமதி. உமா முருகன். சின்னாளப்பட்டி. ரூ.500.
திருமதி. ஜெயந்தி தியாகராஜன். மாவுத்தன்பட்டி. ரூ. 500.
திருமதி. சுகன்யா சாய்பிரபு. கொளத்தூர். ரூ.500.
திருமதி. பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திரு.பி.இராமச்சந்திரன். சென்னை. ரூ.300.
திரு. சாய்பிரபு. வில்லிவாக்கம். ரூ.300.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர் டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திரு. விஜயன் சி.சி.பேங்க் மேலாளர். ரூ.200.
திருமதி. ஹேமலதா வைத்தியநாதன். குரோம்பேட்டை. ரூ.200.
திருமதி.சாந்தா. பெரம்பூர். ரூ.190.
திரு.நாராயணபாபு. வில்லிவாக்கம். ரூ. 150.
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.125.
திரு. ஜி. ராஜசேகர். ஓட்டேரி.ரூ.100.
செல்வி.மோனிஷா.அயனாவரம். ரூ.100
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு. டி.எஸ். குணவர்த்தன். ரூ.100
திருமதி.பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100.
திரு.கணேஷ் கபே. வில்லிவாக்கம். ரூ.100
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100
திரு.பி.ராஜேந்திரன்.மேற்கு மாம்பலம். ரூ.101.
டாக்டர்.கார்த்திகா வர்ஷினி ரூ.50.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 25 கி

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.



சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா – ரூ.1000 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு.மலையப்பன். வேலூர் - ரூ.1000
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி - ரூ.500
திருமதி.திலகம். குரோம்பேட்டை - ரூ.200
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார் பெரம்பூர். - ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர் -100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் - ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்


அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068